பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 204 ஆனி 06ஆம் நாள் | வெள்ளிக்கிழமை 21 ஜீன் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
PhD / DBA
Doctor of Business Administration
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# கல்முனை வடக்கைத் தரமுயர்த்துவோம் விரைவில் வரும் வர்த்தமானி அறிவித்தல்

### சம்பந்தன் குழுவிடம் ரணில் நேற்று உறுதி

கொழும்பு, ஜூன் 21
'கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமும் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதால், மீண்டுமொரு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கத் தேவையில்லை. எனவே, வர்த்தமானி

19

## தரமுயர்த்துவதை எதிர்த்து முஸ்லிம்கள் கவனவீர்ப்பு!



மூதூர், ஜூன் 21
கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கூடாது என்றுகோரி அங்குள்ள முஸ்லிம்

19

## தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது

### அத்துரலிய தேரரின் கவலை இது



கொழும்பு, ஜூன் 21
தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலேயே தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர்

19

# இனப்படுகொலை தொடர்பில் ஐ.நா. விசாரணை வேண்டும்!

### கனேடிய நாடாளுமன்றில் ஏகமனதாகத் தீர்மானம்

ஒட்டாவா, ஜூன் 21
2009ஆம் ஆண்டு இறுதிப்போரை உள்ளடக்கிய ஆயுத மோதலின்போது இலங்கைத் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் பன்னாட்டுச் சுயாதீன விசாரணையொன்றை ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுக்க வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது கனேடிய நாடாளுமன்றம்.

19

## கிழக்கு மாகாணத்தில் நேற்று முழுமையான கடையடைப்பு

### 4ஆவது நாளாக உணவு ஒறுப்பு தொடர்கிறது

மட்டக்களப்பு, ஜூன் 21
கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்து மாறுகோரி கிழக்கு மாகாணத்தில் நேற்றுக் கடையடைப்பு நடத்தப்பட்டது. போராட்

19

## போராட்டத்துக்கு ஆதரவாக இன்று தேங்காய் உடைப்பு

வவுனியா, ஜூன் 21
கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரிய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் தேங்காய் உடைக்கும் போராட்டம் இன்று நடைபெறவுள்ளது.

19

### வடக்கைச் சேர்ந்த

## தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
வடக்கு மாகாணத்தை சேர்ந்த 378 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற போரின் போது வடக்கு -கிழக்கு மாகாணங்களில் அரச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்கா மல் நீண்டகாலமாக இழுபறி நிலவி வந்தது.

19

## தமிழர்களின் உரிமைகளை வழங்க அடிப்படைவாதிகள் மறுக்கின்றனர்

### அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21
அடிப்படைவாதிகள் தமிழர்களின் உரிமையை வழங்க மறுக்கின்றனர் என மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர்

19

## ஆளுநரின் அழைப்பை ஏற்க மறுத்தது ஆவா!

அறிக்கையொன்று வலைத்தளங்களில்

19



## ஊழல் புரியும் உயர் அதிகாரிகளும் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள்

### ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21
ஊழல் புரியும் அனைத்து உயர் அதிகாரிகளும் தண்டிக்கப்படுவார்கள். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராக

19

# கல்முனை வடக்கைத் தரமுயர்த்த முஸ்லிம் காங்கிரஸும் இணக்கம்

கொழும்பு, ஜூன் 21
கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையான நிர்வாக அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக இயங்க வைக்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சம்மதித்துள்ளது.
முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று

19



அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி



## வண்ணை திருவருள் மிகு
# ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலய
### வருடாந்த கொடியேற்ற பெருந்திருவிழா - 22.06.2019

நாளை (22.06.2019) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு அகில இலங்கை புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன் கொடியேற்றப் பெருந்திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலை அலையாக வருகைதந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்திலும் நண்பகல் நடைபெறும் மகேஸ்வரப் பூசையிலும் (அன்னதானத்திலும்) கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தினைப் பெற வாரீர் வாரீர்.

**கொடியேற்றப் பெருந்திருவிழா உபயகாரர்கள்**

**கிருஷ்ணா ஜுவல்லறி,**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கிருஷ்ணா அடைவுகடை,**
**இல.370, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(IN 10482) (14.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் லக்ஷாந்தி
சகிலன் அவர்களின் அன்புத்
தந்தை
**தர்மலிங்கம்**
**தவபாலன் ஜோர்ஜ்**
அவர்கள் இறைபதம்
அடைந்தமையையிட்டு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 30.11.1948
இறப்பு 19.06.2019

**முகாமையாளரும் ஊழியர்களும்,**
**மக்கள் வங்கி பிரதான வீதி கிளை/**
**உரும்பிராய் சேவை நிலையம்.**

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 06.02.1971
உதிர்வு 18.06.2019

**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

எமது பாடசாலையின் வரலாறுப்பாட ஆசிரியை
**திருமதி கலாவதி கோணலிங்கம்**
காலத்தின் கோலத்தின் பாதி வழியிலே -
கலா ரீச்சர்
காலன் உங்கள் உயிர் பறித்த செய்தி கேட்டு
கவலை தாங்காது
பதை பதைத்து நின்றிருந்தோம்
ஆசிரிய உலகின் நட்சத்திரமே
மாணவ உலகின் ஒளிதீபமே
உங்கள் மறைவைத் தாங்க முடியாது
தவிக்கும் உறவுகளுடன் இத்துயரில்
பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
**துயர்பகிர்வோர்**
**யா/இளையதம்பி இந்து வித்தியாலய**
**பாடசாலைச் சமூகம்**

# உங்கள் மோட்டார் சைக்கிள் கனவை நனவாக்க

ஆனி 21ம், 22ம் திகதிகளில்

# TRADE FINANCE

நிறுவனத்திடம் இருந்து ஓர்
அரிய வாய்ப்பு!





Bike Promo X Change



2 மணிநேர கனவு லீசிங்

பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு
ஒரே நாளில் கையில் பணம்

நல்லூர் கந்தசாமி கோவில், பின்புறத்தில்
(Rio Cream House முன்பாக)

உங்களிடம் உள்ள அனைத்து வகையான
பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும்
புதிய மோட்டார் சைக்கிள்
(Bajaj, TVS, Yamaha,Hero Honda & Suzuki)

- குறைந்த கட்டணங்களுடன் லீசிங் வசதிகள்
- விசேட விலைக் கழிவுகள்
- தலைக்கவசம் இலவசம்

தொடர்புகளுக்கு: கோபி: 077 006 2594
சதீஸ்: 076 977 7090

TRADE FINANCE INVESTMENTS PLC
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 222 1898

## வேலையாள் தேவை

கடைச்சல் வேலையில்
அனுபவம் உள்ள
லேத் Man தேவை.
**077 605 9972**

## தேவை

J.C.B றைவர் தேவை.
மணித்தியாலய ஊதியம்
வழங்கப்படும்.
J.C.B வாடகைக்கு விடப்படும்.
**077 221 5167**

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள கல்வி நிறுவனத்துக்குப் பெண் வரவேற்பாளர் தேவை. கணினி அறிவும், ஆங்கில அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
**076 407 2364/ 077 593 9760**

*Congratulations* **பாராட்டி வாழ்த்துகின்றோம்** *Congratulations*

பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய செங்கைப்புரவோன், பதிவரோதயன்

உயர்திரு. **இராசையா குவேந்திரநாதன்** அவர்களின் தன்னலங்கருதாச் சேவையினைப் பாராட்டி

**12.05.2019 அன்று கனடா இ குருவி அமைப்பினால்**
**"புதிய வெளிச்சம்"**
எனும் விருதினை
கனடாவில்
பெற்றுக்கொண்டமைக்கும்

**19.05.2019 அன்று யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் (கனடா) குமரன் விளையாட்டுக் கழகம் கனடாக் கிளையும் இணைந்து வழங்கிய**
**"கொடை மதி"** எனும் பட்டத்தினை
கனடாவில் பெற்றுக்கொண்டமைக்கும்

**16.06.2019 அன்று தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் இந்தியாவின் குளோபல் பீஸ் யுனிவேசிற்றியினால் சிறந்த சமூக சேவைக்கான கௌரவ**
**"கலாநிதி"** பட்டம்
பெற்றுக்கொண்டமைக்கும்



அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும் - ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி.**

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்.திருநெல்வேலிச் சந்தைக்கு அருகில் உள்ள 5 அறைகளுடன் வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.

**076 656 7117** (CS: 26168 (11.17)

**வாடகைக்குக் கொடுக்கப்படும்**

யாழ்.கஸ்தூரியார் வீதியில் நகைக் கடை வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.

**077 693 5610** (CS/ 26123)(11.17)

# சிவமயம்
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 07 . 1933



மறைவு 01 . 07 . 2018

## அமரர் சரவணமுத்து நற்குணம்

ஈழத்துச் சிதம்பரம் எனப்போற்றும் காரைநகர் சிவன்கோயிலுக்குச் செல்லும் வீதியைப் (புதுறோட்) பிறப்பிடமாகவும், கந்தாளை, வாழைச்சேனை, நல்லூர், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சரவணமுத்து நற்குணம் அவர்களின் சங்கடசதுர்த்தி திதி இன்றாகும்.

எங்கள் அன்புத் தெய்வமே!
ஈழத்துச் சிதம்பரக் கூத்தனின் திருப்பாதங்கள்
அடைந்து ஓராண்டாயினும்
தங்களின் பசுமையான
நினைவுகளே எங்கள் உள்ளங்களில்
நிழலாடுகின்றன

எங்களை அன்புடனும் பாசத்துடனும்
வளர்த்து
சீரோடும் சிறப்போடும் வாழவைத்த
எங்கள் அப்பாவே!
உங்கள் பாத மலரை என்றும் போற்றி
வணங்குகின்றோம்.

**396, ஆலய வீதி,
நல்லூர்.**

**மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்**

**YAMAHA வழங்கும் சிறப்பு சலுகை**



**முற்கொடுப்பனவாக வெறும் ரூபா 39,500 மாத்திரமே** செலுத்தி **யமஹா ஸ்கூட்டர்** ஒன்றினை இன்றே கொண்டு செல்லுங்கள்
(இச்சலுகை குறித்த கையிருப்புகளுக்கு மட்டுமே)

**உங்கள் பழைய மோட்டார் சைக்கிள்களை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்ளலாம்.** (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

**இன்றே நாடுங்கள்: நல்லூர் ரியோ ஐஸ்கிறீம் முன்பாக
21.06.2019 - 22.06.2019 வரை**

எமது காட்சியறை:- **Digital Electronics** 62/16, Stanley Road, Jaffna. 077 662 3824, 021 222 4040

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை குமாரவேலு

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - நீர்ப்பாசன திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம் - மாகாணசபை)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தட்டாதெருச்சந்தி, கனடா ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குமாரவேலு 19.06.2019 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், தேவியின் கணவரும், காலஞ்சென்ற கரன் (பாபு) மற்றும் திவாகரன், துஸ்யந்திஆகியோரின்தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, இராஜதுரை, செல்வரட்ணம், சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி, சரஸ்வதி, மகேஸ்வரி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்**

**தகவல்: க.தவமணி**

**076 842 5832**

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

பிறப்பு 23 . 09 . 1939



இறப்பு 22 . 05 . 2019

## அமரர் நாகமுத்து பேரம்பலம்

(ஓய்வுபெற்ற உள்ளகக் கணக்காய்வாளர் - இ.போ.சபை)

கடந்த 22.05.2019 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகமுத்து பேரம்பலம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவும் நன்றி செலுத்தும் வழிபாடும் இன்று (21.06.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு Tilko Hotel (70/6 K.K.S. Road, Jaffna) இல் நடைபெற உள்ளது. இவ் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத்தலைவரின் இழப்பினால் நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வருகை தந்தும், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து ஆறுதல் தந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் அன்னார் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சை அளித்த யாழ்போதனா வைத்தியசாலை 10 ஆம் விடுதி மருத்துவர்கள், தாதிமார்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**48/1, சாஸ்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

### செல்வி தாமோதரம்பிள்ளை அசலாம்பிகை



இல. 29, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தாமோதரம்பிள்ளை அசலாம்பிகை நேற்று (20.06.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம்பிள்ளை (ஓய்வு பெற்ற லிகிதர், லங்கா மணல் கூட்டுத்தாபனம் புல்மோட்டை) மற்றும் விவேகானந்தன் (எரிபொருள் நிரப்பு நிலையம் - அக்கராயன்), புவனேஸ்வரி(லண்டன்)ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுசீலாதேவி மற்றும் நித்தியகாந்தி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும், சுதர்சன் (ஆசிரியர் - மு/ முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை), ஜெயசித்ரா (ஆசிரியை - கிளி /கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை), சிறிதரன், பிரதீபன் (தபாலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், மயூரனின் (லண்டன்) அன்பு பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: வ.சுதர்சன்
(கண்ணன் - மருமகன்)**

**077 774 1389**

# கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
# சபை நிதி வேலைத்திட்டம் 2019 (கட்டம் 11), அபிவிருத்தி ஒதுக்க வேலைத்திட்டம் (கட்டம் 111)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை ( Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700, 021-3142841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2019.06.21 ஆம் திகதியிலிருந்து 2019.07.04 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2019.07.05** ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கோரப்பட்ட வேலைகளில் **1 தொடக்கம் 10 வரையான மற்றும் 14 தொடக்கம் 15 வரையான கேள்விகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம்** கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து **49** நாள்களும், **11 தொடக்கம் 13 வரையான கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம்** கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து **63** நாள்களும் ஆகும்.
09. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**சபை நிதி வேலைத்திட்டம் 2019 ( 1- 13 வரையானது)**
**அபிவிருத்தி ஒதுக்க வேலைத்திட்டம் ( 14 - 15 வரையானது).**

| இல | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | கேள்வி பிணை வைப்பு காலம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 67/3 காரைக்கால் வீதி குறுக்கு ஒழுங்கைஇ 56/6 காரைக்கால் வீதி 2ஆம் குறுக்கு ஒழுங்கைஇ 75/12 காரைக்கால் வீதி 3ஆம் குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு- கோண்டாவில் | **0.579** | 2,000.00 | C9/C8 | 10,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 02 | ஆலடி வீதி கிழக்கு 3ஆம் ஒழுங்கை, சென்செபஸ்தியார் வீதி கிழக்கு 1ஆம் ஒழுங்கை, பேய்ச்சி அம்மன் 2ஆம் ஒழுங்கை, கோகுல வீதி 3ஆம் குறுக்கு ஒழுங்கை, கோகுல வீதி 4ஆம் குறுக்கு ஒழுங்கை, நாகேஸ்வரி ஒழுங்கை - புனரமைப்பு கோண்டாவில் | **1.783** | 2,000 .00 | C9/C8 | 35,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 03 | வராகி அம்மன் பின் வீதி குறுக்கு ஒழுங்கை, 7/5 வராகி அம்மன் பின் வீதி குறுக்கு 1ம்ஒழுங்கை புனரமைப்பு- கொக்குவில் | **0.651** | 2,000.00 | C9/C8 | 13,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 04 | திருநெல்வேலி கிழக்கு புதிய செங்குந்தா வீதி, முகக்குறுணி பிள்ளையார் முன் ஒழுங்கை, கும்பவயல் வீதிகள் புனரமைப்பு – கல்வியங்காடு | **1.097** | 2,000.00 | C9/C8 | 20,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 05 | கே.கே.எஸ் வீதி குட்டிப்பிள்ளையார் ஒழுங்கை, பாடசாலை வீதி 4ஆம் குறுக்கு ஒழுங்கை, பாடசாலை வீதி 5ஆம் குறுக்கு ஒழுங்கை 5/3 விவேகானந்தா் வீதி 3ஆம் ஒழுங்கை, பாரதி வீதி 2ஆம் ஒழுங்கை புனரமைப்பு - கோண்டாவில் | **1.178** | 2,000.00 | C9/C8 | 23,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 06 | திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் கோயில் வீதி - புனரமைப்பு | **1.761** | 2,000.00 | C9/C8 | 35,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 07 | அரியாலை முள்ளி குறுக்கு வீதிகள் நாவலடி அரியாலை கோட்டை விநாயகர் 1ஆம் ஒழுங்கை புனரமைப்பு- | **1.438** | 2,000.00 | C9/C8 | 28,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 08 | குட்செற் வீதி கிழக்கு 4ஆம் குறுக்கு கிளை ஒழுங்கை, அம்மன் வீதி 2ஆம் ஒழுங்கை கோண்டாவில் சாயிதுர்க்கா தெற்கு ஒழுங்கை புனரமைப்பு -கொக்குவில் | **1.506** | 2,000.00 | C9/C8 | 30,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 09 | பெரியதோட்டம் குறுக்கு வீதிகள்- புனரமைப்பு- அரியாலை | **1.397** | 2,000.00 | C8/C7 | 27,000.00 | 30.10.2019 | 60 நாள்கள் |
| 10 | திருநெல்வேலி மரக்கறிச் சந்தை மேற்பக்கம் பாதுகாப்பு வலை அமைத்தல், மரக்கறிச் சந்தை கீழ்தளம் பாதுகாப்பு வலை அமைத்தல் தலைமை அலுவலக பிரிவிட வேலை- கொக்குவில் | **1.074** | 2,000.00 | C9/C8 | 21,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 11 | 41/5- அச்சுகூடம் 3ஆம் ஒழுங்கை ஆடியபாதம் வீதி 1ஆம் சிறு ஒழுங்கை, ஆடியபாதம் வீதி 2ஆம் சிறு ஒழுங்கை பிரம்படி 2ஆம் சிறு ஒழுங்கை பிறவுண் வீதி 1ஆம் சிறு ஒழுங்கை, பிறவுண் வீதி 2ஆம் குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு - கொக்குவில் | **2.174** | 2,000.00 | C8/C7 | 43,000.00 | 30.10.2019 | 90 நாள்கள் |
| 12 | உதயபுரம் வீதிகள் - புனரமைப்பு - அரியாலை | **3.550** | 2,000.00 | C8/C7 | 70,000.00 | 30.10.2019 | 90 நாள்கள் |
| 13 | அம்மன் வீதி 2ஆம், 3ஆம் ஒழுங்கை புனரமைப்பு அரியாலை | **2.372** | 2,000.00 | C8/C7 | 47,000.00 | 30.10.2019 | 90 நாள்கள் |
| 14 | கொக்குவில் நூலக மேற்தள பிரிவிடலும் தாழ்வார அமைத்தலும் | **1.301** | 2,000.00 | C9/ C8 | 26,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |
| 15 | நல்லூர் நூலக மேற்தள பிரிவிடலும் நடைபாதை புனரமைப்பு பாதுகாப்பு வேலி அமைத்தலும் | **1.688** | 2,000.00 | C9/ C8 | 33,000.00 | 30.09.2019 | 60 நாள்கள் |

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2019.06.28** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. **10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

2019.06.21

(IN 10490)(10)

## விற்பனைக்கு
நல்லின பசுமாடுகள்
விற்பனைக்குண்டு.
077 529 2951, 077 766 7457

## நாகபூஷணி திருமண சேவை
மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
021 222 9306/ 071 999 9306/
077 138 7596

## விற்பனைக்கு
குறுகிய காலம் பாவித்த கொட்டகை, புதிய சீற்றிலான தகரம், மரம், நல்ல நிலையில் உள்ள 60 அடி கொட்டகையும் 30 அடி வளைவு கொட்டகையும் 40 அடி தகரத்திலான கொட்டகையும் உடன் விற்பனைக்குண்டு.
தட்டுறாக்கை, கண்ணாடி சோக்கேஸ் விற்பனைக்குண்டு.
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
077 475 8690
075 567 8225

## இலவச வகுப்புக்கள் பிரிவு - 20
பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்களுக்கான பின்வரும் பிரிவுகள் அடிப்படையிலிருந்து ஆரம்பமாகின்றன.
→ ஆங்கிலம் Diploma in English/Spoken English
→ சிங்களம் எழுத்து, பேச்சு, அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட பிரிவு.
→ கணினி
ஆரம்பம் : 22,23/06/2019 சனி, ஞாயிறு
25, 27/ 06/2019 செவ், வியாழன்
நேரம் : 10.00 Am
◀ காலம் 3 மாதங்கள்
IPS
பல்கலைக்கழகத்திற்கு அண்மையில், திருநெல்வேலி.
077 602 1794

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

MAJESTIC CINEPLEX


மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## கால நீடிப்புச்செய்தல்

31.05.2019 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்குறிப்பிடப்படும் வேலை 27.06.2019 வரை காலநீடிப்புச் செய்யப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | கேள்வி ஆவணக் கொள்வனவு இறுதித்திகதி | கேள்வி திறத்தல் (Closing & Opening) |
|---|---|---|---|
| JMC/WD/PSDG (Bu)/2019 - 61 | Construction of Composed yard Platform Work at KaakaiThivu | 27. 06.2019 | 28.06.2019 at 2.00Pm |

**ஆணையாளர், பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் (CF)– 2019
## சாவகச்சேரி பிரதேசசபை

1. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம் அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்தஅட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் தொலைபேசி இல— 0212050356, தொலைநகல் - 0212050348 மின்னஞ்சல்: chavakachcherips1@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் **21.06.2019** ஆம் திகதியிலிருந்து **04.07.2019** ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப **9.00** மணிமுதல் **14.00** மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் அவர்களிடமிருந்து **21.06.2019**ஆம் திகதியிலிருந்து **04.07.2019** ஆம் திகதிவரை மு.ப **9.00** மணிக்கும் பி.ப **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு **04.07.2019 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 21.08.2019) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண் | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை(Mn) (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விபிணை வைப்பு(இலங்கை ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/02/ CF/2019/11 | அம்மன் கோயில் பாடசாலை வீதி திருத்தம் தவசிக்குளம் | 0.17 | 01 மாதம் | C9 | 1,700.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/12 | மடத்தடி 1ம் வீதி திருத்தம் கொடிகாமம் | 0.17 | 01 மாதம் | C9 | 1,700.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/13 | கரம்பகம் பிள்ளையார் வீதி திருத்தம் உசன் | 0.347 | 1 மாதம் | C9 | 3,500.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/14 | கண்டல்காடு வீதி திருத்தம் மட்டுவில் | 0.173 | 1 மாதம் | C9 | 1,700.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/15 | பாலாவி வாகையடி வீதி கச்சாய் | 0.211 | 1 மாதம் | C9 | 2,200.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/16 | நாவலடி வீதி திருத்தம் கெற்பெலி கச்சாய் | 0.128 | 1 மாதம் | C9 | 1,300.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/17 | கெற்பலி பாலாவி வடக்கு ஊரெல்லை வீதி | 0.353 | 01 மாதம் | C9 | 3,600.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/18 | பெரியானோடை சுடலை வீதி புனரமைப்பு | 0.173 | 1 மாதம் | C9 | 1,800.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/19 | மணல் வீதி திருத்தம் மட்டுவில் | 0.217 | 1 மாதம் | C9 | 2,200.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/20 | ஏரியாப்பிட்டி மயான வீதி திருத்தம் கச்சாய் | 0.606 | 1 மாதம் | C9 | 6,100.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/21 | விடத்தல்பளை சம்பாவெளி இணைப்பு வீதி திருத்தம் | 0.128 | 1 மாதம் | C9 | 1,300.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/22 | ஈவினைபிட்டி இந்துமயான வீதி திருத்தம் மட்டுவில் | 0.173. | 1 மாதம் | C9 | 1,800.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/23 | .அமெரிக்கன் த.க.பாடசாலை வீதி கைதடி நாவற்குளி | 0.173 | 1 மாதம் | C9 | 1,800.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/24 | உசன் கரம்பகம் இணைப்பு வீதி திருத்தம் | 0.0869 | 1 மாதம் | C9 | 900.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/25 | பூமரக்கிணறு வீதி திருத்தம் மறவன்புலோ | 0.0865 | 1 மாதம் | C9 | 900.00 | 18.09.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/26 | காருந்து வீதி மறவன்புலோ | 0.130 | 1 மாதம் | C9 | 1,400.00 | 18.09.2019 |

10. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 28.06.2019 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை,
20.06.2019

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா இரத்தினம்**

தோற்றம் 12.09.1941
மறைவு 10.06.2009

திதி : 21.06.2019 திருதியை

எங்கள் அன்பின் தெய்வமே
ஆண்டுகள் பத்து ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும்
எம்மை விட்டு நீங்காது.

234 / 10 சேச் லேன்,
மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

என்றென்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி:-
21.06.2019

**அமரர் ஐயாத்துரை குமாரசாமி**

(முன்னாள் பணியாளர் ச.தோ.சா.கூட்டுறவு நிறுவனம்.
யாழ்ப்பாணம்)

ஆண்டொன்று போனாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

(CS/26162(11,17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 10.06.1948



இறப்பு 17.06.2019

**கணபதிப்பிள்ளை செல்வராசா**

பெரியவிளானை பிறப்பிடமாகவும் இல .1A அத்தபத்து மாவத்தை, தெஹிவளை மற்றும் பெரிய விளானை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை செல்வராசா 17.06.2019 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ராசம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற இராஜினிதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சபாரட்ணம் ரோசம்மா தம்பதிகளின் மருமகனும் பிறேமினி (USA), அபிராமி (UK), கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவரூபன், புவனன், சுதர்ஷன் ஆகியோரின் மாமனாரும் துவாரகன், அபயன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22.06. 2019 நாளை சனிக்கிழமை காலை 10 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிரியைகள் நடை பெற்று மதியம் 01 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் - குடும்பத்தினர்**
**0777 758950,**
**077 2724296**

# பயன் மிகு மரங்கள்



கிராமத்திலோ அல்லது நகரத்திலோ நாம் எங்கு வசித்தாலும் மரங்கள் எமக்கு உதவி புரிவதைக் காணலாம். சுவை மிகு கனிகள், அழகிய மலர்கள் சுவாசிக்கச் சுத்தமான காற்று இவையாவற்றையும் தருவது மரங்களே. கோடை காலத்தில் சுட்டெரிக்கும் சூரியனிலிருந்து தப்பிக்க நிழல் தருவதும் மரங்களேயாகும். மழைக்காலத்தில் கிளைகளுக்குக் கீழ் இடம் தருகின்றன. குளிர்காலங்களில் குளிர் காய சருகுகளையும் சுள்ளிகளையும் மரங்களே தருகின்றன.

மரத்தினால் வீட்டில் ஜன்னல் கதவுகள் மட்டுமன்றி பெட்டிகள்,வண்டிகள், படகுகள், தெப்பம் போன்றவற்றையும் செய்கின்றோம். நாம் எழுதுகின்ற பென்சில், காகிதங்களும் கூட மரத்தில் இருந்து செய்யப்பட்டவைதான்.

கிராமப் புறங்களில் தென்னோலைகளைக் கொண்டு கூரை வேய்கிறார்கள். தென்னோலைகளை ஊற வைத்து கிடுகாகப் பின்னி பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். வேப்ப மரம் பல நன்மைகளைத் தருகிறது. வேப்பிலையின் குருத்துக்களை மென்று தின்றால் தொற்று வியாதிகள் எம்மை அணுகாது. வேப்பங்குச்சிகள் பற்களைச் சுத்தம் செய்ய உதவும். அதனால் தான் ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்று கூறுகிறார்கள். காகம், மைனா போன்ற பறவைகள் வேப்பப் பழத்தை விரும்பி உண்டு விதைகள் பரவ உதவுகின்றன. மாமரங்கள் ஆண்டு முழுவதும் நிழலைத் தருகின்றன. இவற்றின் இலை,காய் , விதைகள் மற்றும் இளம் கிளைகள் ஆடு மாடுகளுக்கு உணவாகின்றன. மாமரம் கோடை காலத்தில் தீஞ்சுவைக்கனிகளைத் தருகின்றது. அதன் உறுதியான பரந்த கிளைகள் சிறுவர்களின் பள்ளிக்கூடம் ஆகும்.மாம்பழத்தைப் பயன்படுத்தி பழச்சாறு பழக்கலவைத் தயாரிக்கிறார்கள். மாங்காய் ஊறுகாய் தயாரிக்கப் பயன்படுகிறது. பலாமரம் நிழல் தருகிறது. பறவை பிராணிகளுக்கு உறைவிடமாகிறது. காற்றின் அதீத வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது. வேர்களோ மண்ணரிப்பைத் தடுக்கின்றன. இவற்றின் இலை குழைகள் ஆடு,மாடுகளுக்கு உண வாகின்றன. பலாபழங்கள் மிக இனிய உணவாகின்றன.

பலாக்காய்களையும் விதைகளையும் நீரிலோ நீராவியிலோ வேக வைத்து தேங்காய்ப்பூவுடன் கலந்து உணவாக உண்ணலாம்.

இவ்வாறு மரங்கள் மனிதருக்கு பல்வேறு வழிகளில் உதவுகின்றன. மரங்கள் இன்றேல் மழை இல்லை. மழை இல்லையெனில் பயிர் இல்லை. பயிர்கள் இல்லையே உணவு இல்லை. உணவின்றி உயிர்கள் வாழ முடியாது.

நாம் நலமாக வாழ மரங்கள் வளர்ப்போம். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம். உலக அழிவைத் தடுப்போம். பசுமை உலகைப் படைப்போம், பாதுகாப்போம்.

## 31 ஆம் நினைவஞ்சலி



திருமதி
**நாகராசா மனோன்மணி**
(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)

தோற்றம் 08.11.1939
மறைவு 22.05.2019

தந்தையும் தாயுமாகி
தூய அன்பினால் எமை வளர்த்து
அறுசுவை உணவு போல
அறிவான கதைகள் சொல்லி
பெருவிருட்சமாய் நின்று
துயர வெய்யிலினைச்சுமந்து
எங்கள் வாழ்வினை உயரவைத்த
தாயெனும் தெய்வம் நீங்கள்.



**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து தங்கரத்தினம்மா



கைதடி நுணாவிலை பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து தங்கரத்தினம்மா நேற்று (20.06.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் சரவணமுத்துவின் அன்பு மனைவியும் குகபாலன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), தனலட்சுமி தேவி (லண்டன்), கிருகலட்சுமி தேவி (ஜேர்மன்), குகசீலன் (ஓய்வுபெற்றஆராய்ச்சிஉதவியாளர், மிருக வைத்தியசாலை , பேராதனை) காலஞ்சென்றவர்களான குகதாசன் (மின் அத்தியட்சகர்), குகராஜன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத்தாயாரும்கருணாநிதி, கலாயினி, ஸ்ரீஸ்கந்தராஜா, பாஸ்கரன், நாகேஸ்வரி காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீதேவி, ஸ்ரீமதி, ஸ்ரீவித்தியா, ஸ்ரீபிரியா, தயாளன் (பொறியியலாளர்), டர்சன் (ஆசிரியர்), தனுசன், பிரணவன் (லண்டன்), முரளி (ஜேர்மன்), குயித்தா, சுனித்தா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும்திஷாந், திலக்ஷி, அக்சயன், அகரன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குகசீலன்
(மகன்)

## மரண அறிவித்தல்



மலர்வு 28 . 04 . 1948
உதிர்வு 20 . 06 . 2019

### செல்லத்துரை செல்வநாயகம்

(ஓய்வுநிலை அதிபர்)

யாழ்.நீலியம்பனை, மல்லாகத்தினைப் பிறப்பிடமாகவும் அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் (ஓய்வுநிலை அதிபர்) நேற்று (20.06.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவாஜினி, சிவாசன், சிவானதி (A.D.R, பிரதேசசெயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பே.இன்பராசா (தபாலதிபர், அஞ்சல் அலுவலகம், பண்டத்தரிப்பு) க.ஜதீசன் (கணக்காளர், நகரசபை, வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகம்மா தம்பதியினரின் அன்புமருமகனும் சரஸ்வதி, தம்பிநாயகம், ஆகியோரின் அன்புச்சகோதரரும் தங்கராசா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிய்யைகள் இன்று (21.06.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி, வடக்கு
தகவல்: குடும்பத்தினர்.
077 253 6025

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கலாவதி கோணலிங்கம்

(ஆசிரியை, யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்)



பிறப்பு 06.02.1971
இறப்பு 18.06.2019

யாழ் வண்ணார்பண்ணை காரைக்காடு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி கோணலிங்கம் கடந்த (18.06.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினவேலு மற்றும் சொர்ணம் தம்பதியரின் அன்பு மகளும் இராசையா அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் கோணலிங்கத்தின் (அக் ஷா நகை மாடம்) பாசமிகு மனைவியும் தன்யாஸ்ரீயின் அன்புத் தாயாரும் கோமதி (சுவிஸ்), திலகவதி (பிரான்ஸ்), யோகச்சந்திரன் (சுவிஸ்), புஸ்பமாலா (காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்) Dr.விமலன் (இறாகம வைத்தியசாலை), ஆகியோரின் அன்புச்சகோதரியும் வரதறாஜன், ரஞ்சிதகுமார், இரகுநாதன், ஜெயராமன், இராமச்சந்திரன், ஸ்ரீனிவாசன், சந்தானலட்சுமி, சரஸ்வதி, இராமமூர்த்தி, . ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரியும் விக்னேஸ்வரன், முரளிதரன், இளஞ்செல்வன், இந்திரகுமாரி, Dr. சுதர்சினி, கோமளா, புஸ்பராணி, திருச்செல்வம், இராசேந்திரம் ,ஜெயரட்ணம், ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அனுஷா, அனுநிதன், அட்சயா, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு சிறியதாயாரும் அபினேஷ், அஸ்மிகா, நதுஷா, அக் ஷா, பவன்அஷ்வின், தாருகேஷ் , ஜஷ்வந்தி, விகாஷ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2019) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்குஅவரின்இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காககோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:R. கோணலிங்கம் (கணவர்) 077 123 4643,
Dr.R.விமலன் (சகோதரன்) 077 362 7043

# புரியப்படாத புனிதங்கள்



தந்தை தன் பிள்ளைகளை வளர்க்கவும் கல்வி கற்பிக்கவும் என்று அவர் நாளிலும் பொழுதிலும் பேருந்து நிலையத்தில் இராப் பகலாக மூடை சுமந்து உழைத்ததால் தன் பிள்ளைகளுடன் கொஞ்சி மகிழ்ந்து விளையாட வேண்டும் என்ற அவரது ஏக்கம் நிராசையாகிப் போனது. அம்மா அவர்களோடு கூட இருந்து சமைத்து உணவூட்டி, கல்வி பயிற்று வித்து அவர்களை ஆளாக்கி விட்டதால் அப்பாவின் இடத்தையும் சேர்த்து அம்மா பிள்ளை மனதில் இடம் பிடித்துக் கொண்டாள். அப்பா பிள்ளைகள் விழிக்க முன்பு தொழிலுக்குப் போய் பிள்ளைகள் உறங்கிய பின்பே வீடு திரும்புவார். அவரது இந்த அயராத உழைப்பே அம்மா மூலமாகப் பிள்ளைகளை வளர்க்கவும் உணவளிக்கவும் அவர்களின் இன்பமான வாழ்க்கைக்கும் உதவியது.

அப்பா குழந்தைகளுடன் தான் நேரத்தைச் செலவழிக்க வேண்டும் என்ற ஆசை நிராசையாகியே விட்டது. "நீ வேலைக்குப் போ" "நான் குழந்தைப் பார்க்கிறேனென அம்மாவை அவர் விரட்டவா முடியும். அம்மா வேலைக்குச் சென்று உழைப்பதும் விட்டு விடுவது அவளது விருப்பம். உழைத்து மனைவி மக்களைப் பாதுகாத்து அப்பாக்களின் கடமை.

அப்பா தன் ஆசைகளை நிராசையாக்கி விட்டு தன் மனைவி பிள்ளைகள் பகட்டாக உடுத்தி நாலு இடம் செல்லும் போதும் வெற்று உடம்போடும் இடுப்பில் ஒரு வேட்டி துண்டோடும் நின்று ரசிப்பார். அவருக்கு தனக்கு ஏதாவது வாங்க வேண்டும் என்ற ஆசையே கிடையாது. பிள்ளை மனைவி கூட "உங்களுக்கு என்ன வாங்கினீர்கள்" என்று கேட்பது கிடையாது.

தன் பிள்ளைகள் சில தருணங்களில் பகட்டுச் செயல்களில் ஈடுபடும் போது சில வேளைகளில் அவர்களின் நடத்தைப் போக்கை அப்பாவின் நண்பர்கள் அவரது காதில்போடும் போது அவர் புத்தி சொல்லிக் கண்டிப்பதுண்டு. இது நண்பர்களைத் திருப்திப் படுத்த அல்ல. தன் பிள்ளை தப்பான வழிகளில் சென்றழிந்து விடக் கூடாது என்பதற்காக. ஆனால் இதனைக் கவனித்த தாய் அவரைப் புரிந்து கொள்ளாது. "என் பிள்ளைகள் அறியாப் பருவத்தினர். அவர்களைத் திட்டிச் சாபமிட வேண்டாமென்று கூறி அவரைப் பிள்ளைகள் முன்பே எதிர்த்து நிற்பாள்.

இதனைக் கவனித்த பிள்ளைகளும் தந்தை எதைக் கூறினாலும் அது தம்மில் உள்ள அன்பினால் கண்டிப்புடன் திருத்துகிறாரே என எண்ணாமல் தம்மை எப்போது வெறுத்து சாபமிடுகிறாரென்றே எண்ணி அவர் சொற்களை அசட்டை செய்வர். அம்மா தான் எம்மில் அன்பு என்று எண்ணுவர். அப்பாவின் பாசம் வெறும் நடிப்பு என்ற முடிவுக்கு வந்து விடுவர். தந்தையும் மனம் நொந்து ஒதுங்கி விடுவார்.

பிள்ளைகளோ பகட்டு வாழ்க்கையில் தொடர்ந்து ஈடுபட்டு பழக்கப்பட்டு ஆடம்பரங்களில் மூழ்கி அலைந்து கெட்டு கல்வியில் பின்னடைந்து வாழ்வில் சீர்கெட்டு அலைவர்.

இதோ தந்தை தன் இறுதிக் காலங்களில் வயோதிபனாகி வீட்டில் தங்கி இருக்கையில் தனது அன்பைப் பேரக்குழந்தைகள் மீது காட்டுவார். கொஞ்சி விளையாடுவார். இந்த கொஞ்சி விளையாடலை" அப்பாஎங்களில் இப்படிப் பாசமாக இல்லை. எங்கள் பிள்ளைகள் மீது பாசமாக இல்லை. எங்கள் பிள்ளைகள் மீது பாசமாக நடிக்கிறார் என ஏளனம் செய்வார்கள்.

இப்படி ஒரு காலம் அவர்களுக்கும் வந்தால் அப்போது புரியும். அப்பாக்கள் என்ற புனிதர்கள் பற்றி.


## கேள்வி அறிவித்தல்.
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சபைநிதி 2019

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. **தலைவர், உள் ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வடமாகாணம்** அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கட்டிடப்புனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டிட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** (தொலைபேசி இல.0212058867 பக்ஸ் இல 0212058866 e.mail – secveps@yahoo.com)இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2019.07.11 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர் /செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி,புத்தூர்** எனும் இடத்திலிருந்து 2019.06.21 ஆம் திகதியிலிருந்து 2019.07.11 ஆம் திகதிவரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-(வரி நீங்கலாக)**செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர் / செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்** எனும் முகவரிக்கு 2019.07.12 ஆம் திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்துமூன்று–2019.09.13) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண்டபத்தில் 2019.07.05 ஆம் திகதி பி.ப **14.30** மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.)Min | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(13)/2/ Council/05/2019 | இறைச்சிக்கடை அமைத்தல், கோப்பாய் | 2.15 | 03 மாதம் | C8 & C7 | 21,500 | 2019.11.08 |
| NP/14/41(13)/2/ Council/06/2019 | கோப்பாய் உப அலுவலகமும் நூலகமும் திருத்தம், கோப்பாய் | 2.10 | 03 மாதம் | C8 & C7 | 21,000 | 2019.11.08 |
| NP/14/41(13)/2/ Council/07/2019 | உரும்பிராய் சந்தையில் கடைகள் அமைத்தல், உரும்பிராய் | 4.48 | 03 மாதம் | C8 & C7 | 44,800 | 2019.11.08 |

**தியாகராஜா நிரோஷ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

2019.06.19



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு A.S நிசாந்தன்**
அவர்களின் அன்பு மாமனார்
**திரு ஜோர்ஜ்** அவர்களின்
பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை
அடைகின்றோம்.
அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம் புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்**



## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 19, கமால் ஒழுங்கை, யாழ்ப்பாணம் ஆதன இல.53 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் A.S.அப்துல் காதர் கைம்பெண் ஆயிசா உம்மா என ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த அசெனா மரைக்கார் சுல்தான் அப்துல் காதர் கைம்பெண் ஆயிஷா உம்மாவும் சுல்தான் அப்துல் காதர் முகமட் சுல்தான் மொகிதீன் என்பவரும் பிரசித்த நொத்தாரிசு சுல்தான் மொகிதீன் முகமட் அபூபக்கர் முகதாவில் 17.02.1949 ஆம் திகதியிட்டு 5902 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் மீரா முகைதீன் அப்துல் ரஹீம் பெண் முத்து முகமது நாச்சியாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளார். குறித்த உறுதியில் தாம் இதன் பின்னகத்தான ஆதனத்திற்கு வழியுருமைச்சட்ட உரித்தின் பிரகாரம் சொந்தமாகியுள்ளதாக பிரகடனப்படுத்தியபோதிலும் குறித்த உறுதியில் தாயுறுதிகள் குறிப்பிடப்படவில்லை. பின்னர் பிரசித்த நொத்தாரிசு முகமட் அல்மரிக்கார் முகமட் சுல்தான் முகதாவில் 25.01.1973 ஆம் திகதியிட்டு 5975 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் மீரா மொகதீன் அப்துல் ரஹீம் மற்றும் பெண் முத்துமொகிதீன் நாச்சியா ஆகியோரால் தமது மகள் சாகுல் ஹமீட் அப்துல் ரஹீம் பெண் முகமட் பாயிஷாவிற்கு சீதனமாக வழங்கியுள்ளார். பின்னர் பிரசித்த நொத்தாரிசு தர்மலிங்கம் சோமசுந்தரம் முகதாவில் 07.02.1980 ஆம் ஆண்டு திகதியிட்டு 313 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி கமால் ஒழுங்கை, பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த மீரா முகைதீன் அப்துல் ரஹீம் மற்றும் பெண் முத்துமொகிதீன் நாச்சியா ஆகியோர் தம்மால் 5975 ஆம் இலக்க உறுதி மூலம் சீதனம் வழங்கப்பட்ட மேற்குறித்த முகமட் பாயிஷா பிள்ளைகளின்றி மரணமடைந்துவிட்டார் என வெளிப்படுத்தி அப்துல் ரஹீம் முகமட் மன்சூருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். பிரசித்த நொத்தாரிசு எம்.எஸ். பாலீல் முகதாவில் 06.09.2017 ஆம் திகதியிட்டு 2437 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் புத்தளத்தைச் சேர்ந்த அப்துல் ரஹீம் முகமட் மன்சூர் என்பவர் இல. 123 /11, கிட்டம்புவ வீதி வெள்ளாம்பிட்டியைச் சேர்ந்த மொகிதீன் அப்துல் காதர் முகமட் கியாஸ்க்கு குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை J/86, மாநகரசபை யாழ்ப்பாணம். "மனதேவன் புலம்" நில.பர 1 3/8 இல், கிழக்குப் பக்கமாக நிந்தப்படுத்தப்பட்ட அரைவாசிக்குளி 12 3/8 இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 4128/27.11.2018 இல் துண்டு 1 எனச் சுட்டப்பட்டு இதன் விஸ்தீரணம் நில.பர 0 குளி 12.67 ஆகும் இதன் எல்லைகள்

கிழக்கு - மத்தனார் சாஹிப் பெண் காதர் உம்மாவினது ஆதனம்.
வடக்கு - கமால் ஒழுங்கை மணல் வீதி.
தெற்கு - வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் ஆதனம்
மேற்கு - முகமட் சலி பெண் முக்குளும்மாவினது ஆதனம்


தற்போது இவ்வாதனத்தை முகமட் அப்துல் காதர் முகமட் கியாஸ் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும். உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது முகமட் அப்துல் காதர் முகமட் கியாஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த் ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்,**
**மாநகரசபை.**



## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 07 . 1941



இறப்பு 19 . 06 . 2019

## சின்னத்தம்பி ரூபசிங்கம்

பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ரூபசிங்கம் 19.06.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிட்டினர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், இரத்தினசபாபதி, துரைசிங்கம் மற்றும் பாக்கியம்,பொன்னுத்துரை ராசலிங்கம், சாந்தகுமாரி, நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராதாறமணன் மற்றும் ராதிகா, ரதீஸ்கா, ரதனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சயாறெக்ஷ், ஜீவின் ஆகியோரின் அன்பு மாமனும், மதுர்னிகா, அக்ஷிதா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(akn.738)

**தகவல்: குடும்பத்தினர்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தவறின் விளைவு!

தென்கிழக்குப்பற்றிக்கொண்டு எரியத் தொடங்கிவிட்டது. நீண்ட காலமாகக் கனன்றுகொண்டிருந்த தணலை பட்டினிப் போராட்டம் என்கிற பெயரில் பிக்கு ஒருவர் ஊதிவிட நெருப்பு சுவாலைவிடுகிறது.

கல்முனைதமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவதற்கான போராட்டம் என்பது இன்று நேற்றுத் தொடங்கியதல்ல. சுமார் 30 ஆண்டுகளாக நடந்து வருகின்றது. தமிழர் மகா சபையின் கோரிக்கையைஏற்றுபொதுநிர்வாகஉள்நாட்டலுவல்கள்அமைச்சுகல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை உருவாக்கி அதற்கான அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டது.

தென்கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் குடிகளின் பரம்பல் என்பது குழல் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல மாறி மாறி அமையப் பெற்றிருக்கின்றது. இதனால்இரு இனங்களுக்காகவும்பிரதேசசெயலகங்கள் அல்லது உப பிரதேச செயலகங்கள் அங்கு அவசியமானவையாகின்றன.

கல்முனைப் பிரதேச சபை 30 வருடங்களுக்கு முன்னர் கரவாகு பிரதேச சபையாக இருந்த காலத்தில் அங்குள்ள தமிழ்க் குடிகளின் பரம்பலைக் கருத்தில்கொண்டே தமிழர் மகா சபை தமிழ் உப பிரதேச செயலகத்தைக் கேட்டது. அந்தக் கோரிக்கையின் நியாயத் தன்மை கருதி 1989ஆம் ஆண்டு தை மாதம் அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

கல்முனைதமிழ் உப பிரதேசசெயலகம் உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் அல்லது அதற்குப் பின்னரான காலப் பகுதியில் உப பிரதேச செயலகங்களாக உருவாகிய சாய்ந்தமருது, நாவிதன்வெளி, இறக்காமம், காரைதீவு போன்ற உப பிரதேச செயலகங்கள் அனைத்தும் தற்போது முழுமையான பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுவிட்டன. கல்முனைமட்டுமே 30 வருடங்களாகத்தரமுயர்த்தப்படாமல் உள்ளது.

அதனைத் தரமுயர்த்தத் தமிழர்கள் விடுக்கும் கோரிக்கை தொடர்பில் கொழும்புஅரசின்5ஆணைக்குழுக்கள்இதுவரையில்விசாரணைகளை நடத்தியுள்ளன. ஆனால் தீர்வு எட்டப்படவில்லை. கல்முனைக்குடியைச் சேர்ந்த முஸ்லிம்களின் தொடர்ச்சியான எதிர்ப்பும், கல்முனை அரசியல்வாதிகள்கொழும்பு அரசில்கொண்டிருந்த அமைச்சுப் பதவி என்கிற அதிகாரமும் காரணமாகத் தமிழ் உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படாமலேயே இருக்கிறது.

தற்போதைய கல்முனை நகரம் அமைந்திருக்கும் பகுதி அதாவது பெரும்பான்மையான வியாபார நிலையங்கள் அமைந்துள்ள பகுதி இந்தத் தமிழ் உப பிரதேச செயலகத்தினுள் அடங்குகின்றது. இந்த வியாபாரநிலையங்களில்அனேகமாக எல்லாமே முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமானவை. அதிகமானவை கல்முனைக்குடியைச் சேர்ந்தவர்களுக்குச்சொந்தமானவை. கல்முனைப்பிரதேசசெயலகத்தின்இதயப்பகுதிபோன்றஇந்தவர்த்தகப்பகுதியைவிட்டுக்கொடுக்க முஸ்லிம்கள் விரும்பாததன் காரணத்தால் தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதைத் தடுத்து வருகிறார்கள்.

ஆனால், தமிழ் உப பிரதேச செயலகத்திற்குள் 29 கிராம சேவகர் பிரிவுகள்அடங்குகின்றன. இங்கு வாழும் பெரும்பாலானவர்கள்தமிழர்கள். முன்னர் 31 பிரிவுகள் இருந்தன. அவற்றில் இரண்டை கல்முனைப் பிரதேச செயலகம் தனக்குள் வாரிச்சுருட்டிக்கொண்டது பின்நாட்களில். இந்த 29 கிராம அலுவலர்பிரிவுகளுக்குமான அபிவிருத்தி பின்னடைந்து வருகின்றது என்பதே தமிழர்களின் தலையாய பிரச்சினை.

கல்முனையே பிரதேச செயலகம் என்பதால் கொழும்பு மற்றும் மாகாணஅரசுகளின்நிதி ஒதுக்கீடுகள்அனைத்தும்அதற்கேசெல்லும். அங்கு கசக்கிப் பிழிந்து எடுக்கப்பட்டதுபோகச் சக்கையாகச் சிறுதொகையேதமிழ்உபபிரதேசசெயலகத்துக்குக் கிடைக்கும். இதனால் எந்த உருப்படியான அபிவிருத்தியும் தமிழர்களின் பகுதிகளில் நடப்பதில்லை. இந்த முதன்மைக்காரணத்தைக்கொண்டேதமிழர்கள்உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோருகிறார்கள்.

தமிழ் – முஸ்லிம் தலைவர்கள் பேசித் தீர்த்திருக்கக்கூடிய விடயம் தான். ஆனால்சில அரசியல்வாதிகளின்சுயநல அரசியல்காரணமாக, முக்கியமான முஸ்லிம் தரப்பில், அது தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே சென்றது. பிரச்சினையைத்தீர்த்திருக்க வேண்டியகொழும்பும் வழக்கம் போலவே முஸ்லிம்களுக்குத் தமிழர்களையும்தமிழர்களுக்கு முஸ்லிம்களையும் எதிரிகளாகக் காட்டிக்கொண்டு பிரச்சினையை இழுத்துக்கொண்டே வந்தது.

விளைவு வாய்ப்பைப் பார்த்து உள்ளே புகுந்துகொண்டது. சிங்கள, பௌத்ததேசியவாதநிகழ்ச்சிநிரல். முதல்நாள்வரைமுஸ்லிம்களுடன் அன்னியோன்யமாகப் பழகிய பிக்கு அடுத்தநாள் தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி பட்டினிப் போராட்டம் அறிவித்தார்.

இப்போது ஆளாளுக்கு அறிக்கை விடுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. சிங்கள, பௌத்த தேசிய வாதம் விரும்பிய தமிழ் முஸ்லிம்விரிசலை ஆழமாக்குவது ஏற்கனவேநடந்து முடிந்துவிட்டது. தமிழ்முஸ்லிம்மிதவாதத்தலைமைகளின்தவறால்வந்தவிளைவுஇது.

# குழப்பவாதிகளுக்கு அடிபணிவதை அரசு நிறுத்துமா?



சேரலாதன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயப்பகுதியில் சிலரால் ஏற்படுத்தப்பட்டுவரும் குழப்பமான சூழ்நிலைக்கு உடனடியாகவே ஒரு தீர்வு காணப்படல் வேண்டும். இல்லையேல் மோசமான விளைவுகளைத் தவிர்க்க முடியாத நிலை தோன்றிவிடும்.

தமிழர்களின் பாரம்பரியமான பிரதேசங்கள் படிப்படியாகப் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் அதிகளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன. வடக்கு மாகாண சபை பதவியில் இருந்த போதே இவற்றைத் தடுக்க முடியவில்லை. மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாததால் தம்மால் எதுவுமே செய்ய முடியவில்லையெனக் காரணமும் கூறப்பட்டது. ஆனால் அதிகாரங்கள் இல்லையெனக் கூறிய மாகாண சபை பதவிக்காலம் முழுவதும் இயங்கியமை வேடிக்கையானது. முதலமைச்சர் உட்பட உறுப்பினர்களின் தேவைக்காகவே மாகாண சபையை இயக்கியமை மக்களுக்குச் செய்த மிகப் பெரிய துரோகமாகும்.

### வன்செயல்களை தூண்டுவது சரியல்ல

அகிம்சையைப் போதித்து சகல இன மக்களிடையேயும் அன்பையும் அமைதியையும் ஏற்படுத்த வேண்டிய பௌத்த துறவிகள் மக்களைத் திரட்டி போராட்டங்களில் ஈடுபடுவதும் வன்செயல்களைத் தூண்டிவிடுவதும் ஏற்கத் தக்க செயல்களல்ல. புத்த பிரானும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்புக்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள் அளவிட முடியாதன. உயிரிழப்புக்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளதுடன் ஏராளமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவற்றைவிட நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தந்த சுற்றுலாத்துறை முழுமையாகவே முடங்கிக் காணப்படுகின்றது. குண்டுவெடிப்புக்கள் காரணமாக முஸ்லிம் இனத்தவர்கள் மீதான வெறுப்பு பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாகக இடம்பெறுவதால் அந்த மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பௌத்த தேரர்களின் கடுமையான எதிர்ப்பையடுத்து முஸ்லிம் ஆளுநர்கள் இருவரும் சலக அந்த இனத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் தமது பதவிகளைத் துறந்துள்ளனர். இதனால் அரசுக்கு மேலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

### முரண்பாடு

இது ஒரு புறமிருக்க தற்போது தமிழர்களுடன் முரண்படுகின்ற போக்கைக் காண முடிகின்றது. இது நாட்டை மேலும் மோசமான நிலைக்குள் தள்ளிவிடும். சிறுபான்மை இனங்களுடன் பகைத்துக் கொண்டு எந்தவொரு பெரும்பான்மையினரும் நிம்மதியாக வாழ்ந்ததாகச் சரித்திரமே கிடையாது. இந்த நிலையில் முஸ்லிம்களையும், தமிழர்களையும் பகைத்துக் கொள்வதால் மோசமான விளைவுகள்தான் ஏற்படும்.

தென்பகுதியின் உயர்மட்ட அரசியல்வாதிகள் பதவிகளைப் பெறுவதிலேயே அக்கறை காட்டி வருகின்றனர். ஆட்சியைக் கவிழ்ப்பதிலும் அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதிலுமே அவர்களின் கவனம் திரும்பியுள்ளது. நாட்டைப் பற்றியோ அங்கு வாழுகின்ற மக்களைப் பற்றியோ அவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலை மாறுமெனத் தற்போது எதிர்பார்க்க முடியாது.

### தேரர்களின் தலையீடு

பௌத்த தேரர்கள் தாம் நினைத்தால் எதையுமே சாதிக்க முடியுமென நினைக்கின்றனர். இதற்கு ஏற்றாற்போன்று அரசும் நடந்து கொள்வதைக் காண முடிகின்றது. நீராவிப்பிட்டி பிள்ளையாளர் ஆலய விவகாரம் நீதிமன்றத்தால் கையாளப்பட்டுத் தீர்ப்பும் வழங்கப்பட்ட நிலையில் ஒரு சாரார் வெளியிடங்களிலிருந்து ஆள்களை அழைத்து வந்து குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதும் எச்சரிக்கை விடுப்பதும் சரியெனத் தெரியவில்லை. இவ்வாறான சம்பவங்களை அரசு தொடர்ந்தும் வேடிக்கை பார்ப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிறுபான்மை மக்கள் மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்வதை உணரக் கூடியதாக்வுமுள்ளது.

பௌத்தர்களே வாழாத பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவுவதும் விகாரைகளை அமைப்பதும் ஒரு கபட நோக்கத்துடனான செயற்பாடுகள் என்பதை எவருமே புரிந்து கொள்வார்கள். முதலில் புத்தர் சிலைகள் பின்னர் பௌத்த விகாரைகள், அதன் பின்னர் விகாரைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள். இது தான் இந்த நாட்டில் இடம்பெற்றுவருகின்றது. தமிழர்களின் காணிகளை அபகரிப்பதற்கு இந்தப் பொறிமுறைதான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மீண்டும் ஆயுதம் ஏற்றுவதற்கு இந்த அரசு நிர்ப்பந்திப்பதாகவே தெரிகின்றது. இடம்பெற்று முடிந்த ஆயுதப் போராட்டத்தினால் கிடைத்த கசப்பான அனுபவங்களை தமிழர்கள் இன்னமும் மறக்கவில்லை. இந்த நிலையில் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ளக் கூடிய சக்தி எவரிடமும் இல்லை.

### கோழைத்தன செயற்பாடு

ஆட்சியாளர்களின் கோழைத்தனமான செயற்பாடுகள் இனிமேலும் தொடரக் கூடாது. பௌத்த துறவிகளின் மிரட்டல்களுக்கு அடி பணிவதை விட ஆட்சியை விட்டு நீங்குவதே கௌரவமானது. போராட்டங்களை நடத்துவது மக்களின் ஜனநாயக உரிமை என்பதை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை அநீதியான போராட்டங்களை அனுமதிப்பது நாட்டின் எதிர்காலத்தையே குழிதோண்டிப் புதைத்து விடும். அதுமட்டுமல்லாது தமிழர் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற அத்துமீறிய செயற்பாடுகளும் உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும்.

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM

உதயன் செய்திகள்

09

வெள்ளிக்கிழமை 21 ஜூன் 2019

## கிளிநொச்சியில்
# சமுர்த்தி அலுவலர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அலுவலர்கள் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி அலுவலர்கள் சங்கத்துடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நேற்று மேற்கொண்டனர்.

புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி உரித்துச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளில் பொது மக்கள் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் சிலர் அந்தப் பதவிக்குத் தகுதியில்லாதவர்கள் என்று பேசியிருந்தனர். அவர்களின் இந்தக் கருத்துக்கு எதிராகவே மேற்படி கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் அனைவரும் நிறைவான தகுதியுடன் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் தகுதிகாண் காலம் நிறைவுற்று அதற்கான உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்று வருகின்றனர். இந்த நிலையில் அவர்களை மேற்படி பதவிகளுக்குத் தகுதியில்லாதவர்கள் என்று கூறுவதனை நாம் வன்மையாக கண்டிருக்கின்றோம். இத்தகைய கருத்தை வெளியிட்ட அரசியல் வாதிகள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும், இலங்கையில் உள்ள அனைத்துப் பதவிகளுக்கும் அடிப்படைத் தகுதியுண்டு. அது நாட்டின் சட்டம். சாதாரண சிற்றூழியர்கள் கூட தரம் எட்டில் கல்வி கற்றிருக்க வேண்டும். ஆனால் அரசியல்வாதிகளுக்கு மட்டும் எந்த அடிப்படைக் கல்வித் தகுதியும் கேட்கப்படுவதில்லை.




இலங்கையில் உள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் சாதாரண அடிப்படைக் கல்வித்தகுதியே இல்லாதவர்கள் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ம-214)

## ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட
# குசும்தாச, பியதாச ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஜூன் 21

ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் அரச தலைவர் செயலணியின் தலைமை அதிகாரி கலாநிதி குசும்தாச மஹானாம மற்றும் அரசமரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாச திசாநாயக்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கான கட்டடம், அங்கிருந்த இரும்புப் பொருள்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்த இந்தியப் பிரஜைக்கு, நிறுவனத்தைக் கையளிப்பதற்காக இலங்கை சீனி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் 20 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற 24 குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி கொழும்பிலுள்ள பிரபல நட்சத்திர விடுதியில் குறித்த இலஞ்சப் பணத்தை பெற்றுக்கொண்டபோது பிரதிவாதிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 4 மாதங்கள் இரண்டு பிரதிவாதிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரத்தில் 46 சாட்சியாளர்களையும் 41 முறைப்பாட்டாளர்களையும் முன்னிலைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

(ம)

# வெளிநாடுகளுக்குச் செல்ல அலோசியஸுக்குத் தடை!

கொழும்பு, ஜூன் 21

பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் தலைவர் ஜெப்ரி ஜோசப் அலாசியஸ் வெளிநாடு செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை திரும்பப் பெற்று உத்தரவிட்டது கொழும்பு நீதிவான் நீதிமன்றம்.

சட்டமா அதிபர், கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரமொன்றைத் தாக்கல் செய்து முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தனது மகளின் திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரை சிங்கப்பூருக்கு செல்வதற்கு ஜெப்ரி ஜோசப் அலோசியஸுக்கு கடந்த 13ஆம் திகதி நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

குறித்த சந்தேகநபர் உள்ளிட்ட 10 சந்தேகநபர்களுக்கு எதிராக விசேட மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, வழக்கு தொடர்வதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதன் காரணமாக வழக்கின் 10ஆவது சந்தேகநபர் அலோசியஸுக்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதி வழங்குவதனூடாக அவர் நீதிமன்றத்தை புறக்கணிக்கக்கூடும் என சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம மன்றில் தெரிவித்தார். இதையடுத்தே அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அனுமதி திரும்பப் பெறப்பட்டது.

(ம)

# கூட்டமைப்பின் அசிரத்தையால்தான் போராடும் நிலமை ஏற்பட்டுள்ளது

## போராடுவோரில் ஒருவர் விசனம்

மட்டக்களப்பு, ஜூன் 21

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் இதுவரை தரமுயர்த்தப்படாமைக்கு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு நாங்கள் வாக்களித்தமையே காரணமென நாங்கள் உணர்கின்றோம் என்று அங்கு உணவு ஒறுப்பில் ஈடுபடுபவர்களில் ஒருவரான பாண்டிருப்பு அனைத்த ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் கி.லிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது போராட்டத்துக்கு அரச அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ சாதகமான பதில் தரவில்லை. நாங்கள் வாக்களித்து அனுப்பிய அரசியல்வாதிகளின் அசமந்தப்போக்கே உண்ணாவிரதப் போராட்டத்துக்குக் காரணம் - என்றார்.

(த-46)

# மல்வில் கிருஸ்ணனுக்கு சங்குமுழுக்கு

பளை ஜூன் 21

பளை இயக்கச்சி மல்வில் கிருஸ்ணன் கோவில் குடமுழுக்கு தின சங்குமுழுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் இடம்பெறும் பிரம்மசிறி முரளீதர வித்யானந்தக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-9)

# செயலகத்தை தரமுயர்த்தப் போராடுவது தமிழரின் 30வருடங்கள் கால கோரிக்கை

## அதை நிறைவேற்றுமாறு இந்து குருமார் அமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி, தொடரப்படும் உண்ணாவிரதப் போராட்டக்காரர்களின் 30 வருட கால கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்துக் குருமார் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில்இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் சிவசிறி. கு.வை.க. வைத்தீஸ்வரக்குருக்கள் மற்றும் செயலர், பிரம்மசிறி. கே. சந்திரசேகர சர்மா ஆகியோர் இணைந்து விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்முனை வடக்கு பிரதேச சபையைத் தரமுயர்த்தக் கோரி கடந்த 17ஆம் திகதி தொடக்கம் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் சர்வமதத் தலைவர்களான கல்முனை சுபத்ராமய விகாராதிபதி வண. ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கு இந்துக் குருமார் ஒன்றிய தலைவர், கல்முனை முருகன் ஆலய தலைமைக்குரு சிவசிறி க.கு. சச்சிதானந்த குருக்கள், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகர் ராஜன், ஆ.விஜயரெத்தினம் ஆகியோர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். பின்னர் பொது மக்களும், மதத் தலைவர்களும் இணைந்து 4ஆவது நாளாக நேற்றும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1993 ஆம் ஆண்டுஜூன் 28 ஆம் திகதி உப பிரதேசங்கள் இந்த நாட்டில் உருவாக்கப்பட்டன. கல்முனைப் பிரதேச செயலகம் மாத்திரம் தரமுயர்த்தப்படாமல் உள்ளது. தமிழ் மக்களின் 30 வருட கோரிக்கையே இன்று உண்ணாவிரதமாகப் பரிணமித்துள்ளது.

காலந்தோறும் ஆட்சியில் இருந்த அரசிடம் இது தொடர்பாக, பல கோரிக்கைகள் முன்வைத்த போதும், எந்தவித பயனும் மற்றும் நம்பிக்கை இழந்து இறுதியில் மக்கள் அறப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். எனவே, இவை தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினையாக உள்ளது.

ஆகையினால், கல்முனை பிரதேச சபையைத் தரமுயர்த்த வேண்டுமென்று இந்துக் குருமார் அமைப்பும் தனது ஆதரவை தெரிவித்துள்ளது. அரசு உடனடியாக உரிய தீர்வை வழங்க வேண்டும் - என்றுள்ளது.


(த-106)

# மலைப் பாம்பும் விசப் பாம்புமே மாறிமாறி ஆட்சிக்கு வருகின்றன

## ஒன்று விழுங்கும் மற்றையது நின்று கொல்லும் இப்படித் தெரிவிக்கிறார் சி.வி.விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு முதன்மைக் கட்சிகளுமே, தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளில் ஏட்டிக்குப் போட்டியாகவே செயற்பட்டு வந்திருக்கின்றமை வரலாறு. ஒரு கட்சி மலைப்பாம்பு என்றால், மற்றைய கட்சி விஷப்பாம்பு என்பதே யதார்த்தம். ஒன்று விழுங்கும். மற்றை யது நின்று கொல்லும். இவ்வாறு, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



அவர் அனுப்பிய வாராந்த கேள்வி பதிலில் இப்படித் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**முகமூடி அணிந்த நல்லாட்சிப் பாம்புகள்**

கடந்த 5 வருடங்களில் நல்லாட்சி என்ற முகமூடி அணிந்த இரண்டு பாம்புகளும் ஒன்று சேர்ந்த ஆட்சியில் தான் தமிழர்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் ஒரு சில இடங்களில் பொதுமக்களின் காணிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றிவிட்டு ஆயிரக்கணக்கான எமது காணிகள் கபளீகரம் செய்யப்பட்டுவருகின்றன.

எமது போராட்டங்கள் ஒருபுறம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எந்தவித பாதிப்பும் இன்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் வகையில் நாம் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக 2019 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 679 ஏக்கர் தனியார் காணிகளும் 3178 ஏக்கர் அரச காணிகளும் படையினர் வசம் உள்ளன.

ஆனால் மேலதிகமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை இராணுவம் தனது முகாம்களுக்காகவும் குடியிருப்புக்களுக்காகவும் கைவசப்படுத்தி வைத்திருக்கிறது என்று அறியமுடிகின்றது.

மன்னார் மாவட்டத்தில் 12,154 ஏக்கர் காணியை வன விலங்குகள் திணைக்களமும், 12,275 ஏக்கர் காணிகளை வன இலாகாவும் கைவசப்படுத்தியுள்ளன.

இவை தவிர இராணுவம் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் ஆகியனவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைத் தம் வசம் வைத்துள்ளன.

**தாயகக் கோட்பாடு உடைத்தெறியப்படும் நிலை**

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய தமிழ் மாவட்டங்களை நில ரீதியாக இணைக்கும் மணலாறு மற்றும் வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடியேற்ற திட்டங்களால் வடக்கு கிழக்கு தாயகக் கோட்பாடு மிக விரைவில் உடைத்தெறியப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

**மகாவலி வடக்கே வராது**

இது நடைபெற வசதியளித்த ஒரேயொரு காரணம் என்ன? மாகாவலித்திட்டம்! வடக்கு கிழக்குக்குத் தண்ணீர் தரப்போகின்றோம் என்று ஆசைகாட்டி ஒரு சொட்டு மகாவலித் தண்ணீரை இதுவரை தராமலே எமது காணிகளைக் கபளீகரம் செய்து வருகின்றனர். உண்மையில் மகாவலி நீர் வடக்குக்கு வராது என்பதே தகைமைபெற்ற எமது எந்திரிகளின் கருத்து.

**முட்டையில் மயிர் பிடுங்கிகள்**

சிங்களத் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒற்றுமையாகச் சிந்தித்துத் தமது மக்களின் நலனைப் பேண நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளனர். அவர்கள் தமது புத்திஜீவிகளின்முடிவுகளைஆராய்ந்து வேண்டுவனவற்றை நடைமுறைப்படுத்தி தமது இன நலன்களை மேம்படுத்தி வந்துள்ளனர்.

கேவலம் கல்விக்குப் பெயர் போன எமது தமிழ்த் தலைவர்கள் முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டு காலந் தள்ளி வந்துள்ளனர்.

எமது அரசியல்வாதிகளின் தற்போதைய பேச்சுக்களைப் பார்த்தால் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. எமது நிலங்கள் பறிபோகின்றன. இளைஞர்கள் வெளிநாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். எமதுமக்கள்தொகை வெகுவாகக் குறைந்து வருகின்றது. இங்கிருப்பவர்கள் வாள்வீச்சிலும் வலிமைமிக்க போதைப்பொருள்களிலும் நாட்டம் காட்டி வருகின்றார்கள். நாங்கள் யதார்த்தத்தை மறந்துவிட்டு முட்டாள்த்தனமான விவாதங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

**கட்சி நலன் மட்டுமே**

அறிவுள்ள திறமையுள்ள எம் தமிழ் இனம் எங்கே? என்ன நடந்தது எமக்கு? எமக்கு ஏற்பட இருக்கும் ஆபத்துக்களைப் புரிந்து கொண்டுதான் இவை குறித்து கவலை கொள்ளும் தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஓரணியில் சேர்ந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை அண்மைக் காலமாக நான் வலியுறுத்தி வருகின்றேன். ஆனால்எம்மவர்கள் கட்சி நலம் பற்றியும் தமது சொந்த நலன்கள் பற்றியும் சிந்திக்கும் அளவுக்கு மக்கள் நலனில் கவலை கொள்வதாகத் தெரியவில்லை என்றுள்ளது. (த)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கைதடி தெற்கு உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவி திருமதி குகனேஸ்வரி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## ஆக்கதிறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாண அமைச்சுக்கள் திணைக்களங்களில் பணிபுரியும் அரச அலுவலர்களுக்கு இடையிலான மற்றும் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கதிறன், போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் நாளை சனிக்கிழமை மற்றும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அரச அலுவலர்கள் தங்களுக்குப் பெர்ருத்தமான மாவட்டத்திலும் மன்றங்களினூடாக விண்ணப்பித்தவர்கள் மன்றம் அமைந்துள்ள மாவட்டத்திலும் தோற்ற முடியும்.

நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கவிதை, ஓவியம், குறுநாடகவாக்கம் ஆகிய போட்டிகளும், நாளைமறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடலாக்கம், சிறுகதை போட்டிகள் நடைபெறவுள்ளன்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிளிநொச்சி செயலக பயிற்சி நிலையத்திலும் (டிப்போ சந்தி அருகில்), வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கோவிற்குளம் சிறி அகிலாண்டேஸ்வரி நுண்கலைக்கல்லூரியிலும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மன்னார் மாவட்ட செயலகத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஐ)

# சத்தியசீலன் ஆளுநர் அலுவலகத்துக்கு இளங்கோ வடக்குக் கல்வி அமைச்சுக்கு

## முதலாம் திகதியிருந்து இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் எஸ்.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலராக நியமிக்கப்படவுள்ளார். வடக்கு மாகாண ஆளுநரின் செயலராக, தற்போதைய கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலராக கடந்த 7 ஆண்டுகளாக இளங்கோவன் பணியாற்றுகிறார். வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட காலத்திலும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலராக இளங்கோவன் பணியாற்றியிருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக ஜீ.ஏ.சந்திரசிறி நியமிக்கப்பட்ட காலத்தில் ஆளுநரின் செயலராக இளங்கோவன் நியமிக்கப்பட்டு ஆளுநர்களான பலிகக்கார மற்றும் ரெஜினோல் குரே காலத்திலும் இன்றைய ஆளுநர் சுரேன் ராகவன் காலத்தில் ஆளுநரின் செயலராக இளங்கோவன் பணியாற்றுகிறார்.

சத்தியசீலன், இரு தடவைகள் கல்வி அமைச்சின் செயலராகவும், விவசாய அமைச்சு , மீன்பிடி அமைச்சு ஆகியவற்றின் செயலராகவும் பணியாற்றியுள்ளார்.

(சு-105)

## தமிழ் அரசு கட்சியின் தொகுதிக்கிளை தேர்வு

யாழ்ப்பாணம், யூன் 21.

தமிழ்அரசுக்கட்சியின்நல்லூர்த் தொகுதிக்கிளைத்தேர்வுநேற்று முன்தினம்கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கட்சியின் நிர்வாகச் செயலர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் தலைமையில் இடம் பெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடுஅண்மிக்கும்நிலையில் சகல தொகுதிக் கிளைகள் மாவட்டக் கிளைகளுக்கான தேர்வுகள் இடம்பெறுகின்றன. இதன்பிரகாரம் தற்போது நல்லூர் தொகுதிக் கிளைத் தேர்வு இடம்பெற்றது. இவ்வாறு இடம்பெற்ற தேர்வில் தலைவராகசீ.வி.கே.சிவஞானமும், செயலராக பெ.கனகசபாபதியும், பொருளாளராக எஸ்.கனகராய் ஆகியோர் உட்பட 10பேர் கொண்டசெயற்குழுஉறுப்பினர்கள்தெரிவாகினர். (ஐ-105)

# அபகரித்த வீதியை விடுவிக்கக் கோரி நாளை போராட்டம்


யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் நகரில் அபகரித்த வீதியை மீண்டும் பொது மக்கள் பாவனைக்கு விடுமாறு கோரி நாளை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பொது வீதி ஒன்று நீண்டகாலமாக அபகரிக்கப்பட்டு பொது மக்களின் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. அந்த வீதியை மீண்டும் பொதுப்போக்குவரத்துக்கு திறக்குமாறு கோரி போராட்டம் இடம்பெறவுள்ளது. நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்த போராட்டம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொது மக்கள் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# சூரிய மின் சக்தியை மின்சாரமாக்கி 13 சபைகள் வருமானம் ஈட்டவுள்ளன

## வடக்கு உள்ளூராட்சி அமைச்சு நடைமுறைப்படுத்துகிறது



யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கில் பிரதேச சபை தலைமை அலுவலக கட்டடங்களில் சூரிய மின் உற்பத்தி தகடுகளைப் பொருத்தி மேலதிகமாகச்சேமிக்கப்படும்மின்சக்தியைவிற்பனைசெய்வதன்மூலம் சபைகள் வருமானத்தை அதிகரிக்கவுள்ளன.

இதற்கென்று ஆசிய மன்றத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மூலோபாயத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில்13 உள்ளூராட்சி சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்புடன் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தச்செயற்றிட்டம்வடக்குமாகாண உள்ளூராட்சிஅமைச்சால்நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் வலி. வடக்கு, வலி. மேற்கு, மாந்தை மேற்கு, வெங்கல செட்டிக்குளம், பச்சிலைப்பள்ளி, பருத்தித்துறை, வவுனியா வடக்கு, மன்னார், மாந்தைகிழக்கு, நானாட்டான், காரைநகர் , கரைதுறைப்பற்றுபிரதேசசபையும்வல்வெட்டித்துறைநகரசபையுமாகமொத்தம்13 உள்ளூராட்சிசபைகள்மூலோபாய அபிவிருத்தித்திட்டத்தின்கீழ்சூரியத் தகடுகள்மூலமாகமின்பெற்றுவருமானம் ஈட்டவுள்ளன. இதற்குரிய எண்ணக்கரு பத்திரங்களைச் சமர்ப்பிக்காத சபைகள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டவில்லை.

இந்த வேலைகளை அதிகமான சபைகள் தொடங்கியுள்ளன என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (த-50)

## வருடாந்த மாநாடு

கொழும்புத்துறை.ஜூன் 21

யாழ்ப்பாண மறைமாவட்ட பொது நிலையினர் கழக வருடாந்தமாநாடுநாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பாதுகாவலன்மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் மரியன்னைபேராலயத்தில் யாழ்ப்பாண ஆயர் மேதகு ஜஸ்ரின்பேணாட்ஞானப்பிகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் சிறப்புத் திருப்பலி யைத் தொடர்ந்து பொதுநிலையினர் கழகத் தலைவர் மறோமியல் தலைமையில் பாதுகாவலன்மண்டபத்தில்நிகழ்வுகள் இடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண ஆயர் கலந்து கொள்வார்.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்பணி எஸ். ஜே. இம்மனுவல்அடிகளின் சிறப்புரை பொதுநிலையினர்கழகமுன்னாள்இயக்குநர் அருட்பணி இ.மி.வி. இரவிச்சந்திரன் அடிகள் தலைமையில் கவியரங்கு மறைமாவட்ட கோட்ட மட்ட கழங்களின் செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல், பசாம் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு என்பன இடம்பெற்றவுள்ளதாக பொது நிலையினர் கழக இயக்குநர் அருட்பணி யோ.யோ.மவுலிஸ்அடிகள் அறிவித்துள்ளார். (ஜ-135)


## முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம்

எழுவைதீவு,ஜூன் 21

முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் எழுவைதீவில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. சமூக சேவைகள் அமைச்சின் உதவியுடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி, குடும்பநல அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆயுள்வேத வைத்தியர் ,எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இம் மருத்துவ முகாமில் பல் மருத்துவரின் வாய்ப் பரிசோதனை, கண் பரிசோதனை, குருதியில் சீனியின் அளவு, கொலஸ்ரோல் பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. (ஜ-154)





## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம்,ஜூன் 21

போதை ஒழிப்பு நடைபவனி வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில்புளியங்குளத்தில்நேற்று நடைபெற்றது.

"நான்போதைபொருளுக்கு எதிரானவன்" என்ற தொனிப்பொருளுக்குஅமைவாக இந்த நடைபவணி புளியங்குளம் வலயக் கல்வி பணிமனையிலிருந்து புளியங்குளம் மகாவித்தியாலயம் வரை இடம்பெற்றது.

நடைபவணியில் போதை ஒழிப்பு தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத்தாங்கியவாறு புளியங்குளம் மகாவித்தியாலய மாணவர்களும், வவுனியா வடக்குப் பிரதேச செயலக அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

அத்துடன் போதை ஒழிப்பு தொடர்பானவிழிப்புணர்வு ஸ்ரிக்கர்களும் வீதியால் செல்லும்வாகனங்களுக்கு ஒட்டப்பட்டன. (ஜ-7)

## யோகா தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 21

பன்னாட்டு யோகா தின நிகழ்வு யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை அமைப்பால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ)

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூன் 21



கையூட்டு மற்றும் ஊழல் சட்டங்கள்தொடர்பில் அரச அலுவலர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவூட்டும் பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.

யாழ்ப்பாண பொது நூலக கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கையூட்டு ஊழல் ஆணைக்குழுவின் திணைக்களம், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின்ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது கையூட்டு மற்றும் ஊழல் தொடர்பான சரத்துக்களை ஆய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின்பணிப்பாளர் நாயகம் சரத் ஜெயமாலன, கபே அமைப்பின் பதில் நிறைவேற்று பணிப்பாளர் மொகம்மட் மனாஷ் மகீன்உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுகருத்துரை வழங்கியிருந்தனர். நிகழ்வில் உள்ளூராட்சி மன்றஉறுப்பினர்கள், பொது அமைப்புக்களின்பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், கபேஅமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும்கலந்து கொண்டனர். (ஜ-ரி1)

## திங்கள் தொடக்கம் போதை ஒழிப்பு கண்காணிப்பு குழுக்களும் அமைப்பு

யாழ்ப்பாணம். ஜூன் 21

போதை ஒழிப்பு வாரம் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. அன்றையதினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில்போதைஒழிப்புநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. போதைஒழிப்பு குழுக்களும்அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

"போதைஒழிப்புக்காககிராமமட்டங்களில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தக்குழுவில் அங்கத்துவம் பெற்று தேசிய செயற்றிட்ட நடைமுறையில் ஒன்றிணைந்து சக்திமிக்க கிராமத்தை ஒன்றிணைப்போம்"என்றுநாடாளுமன்ற உறுப்பினரும் அரசதலைவரின் தேசிய செயற்றிட்டங்களின் கருத்திட்ட ஒருங்கிணைப்பாளருமான இ. அங்கஜன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் துறை சார்ந்த அமைப்புக்கள் ,சிவில் அமைப்புக்கள், கிராம மட்ட அமைப்புக்கள், மற்றும்திணைக்களதுறைசார்அதிகாரிகள், பொலிஸார் மற்றும் மக்கள் பங்களிப்புடன் போதை ஒழிப்பு செயற்றிட்டம்நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மாநகர, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், இணைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களின் ஒன்றிணைவுடன், பாடசாலைகள், கிராம மட்ட அமைப்புக்கள் ரீதியாக பல்வேறு செயற்றிட்ட நடவடிக்கைகளுடன் வலுவான பிரயோகக் கட்டமைப்புக்கள்ஏற்படுத்தப்படவுள்ளன என்றும்தெரிவிக்கப்பட்டது. (த-21)

## நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி வருடாந்தம் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் பங்குகொள்ளும் கலைஞர்கள்,மன்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை இளங்கலைஞர் மன்றம் என்ற முகநூலின் ஊடாகப் பதிவிறக்கம் செய்து அல்லது இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

### தேசிய வீடமைப்பு அதிகார சபையின்

# வீட்டுத் திட்டத்துக்கு ரூ.7,50,000தான்

## புதிய சுற்றறிக்கை செல்லுபடியற்றது

யாழ்ப்பாணம், ஜூன் 21

“தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சருக்குத் தெரியாமல், வீடுகள் கட்ட 5 லட்சம் ரூபா மட்டுமே என்று மேலதிக செயலர் அனுப்பிய சுற்றறிக்கையை உடனடியாக மீளப்பெறுகிறேன். வீடுகள் கட்ட 7 லட்சத்து 50 ஆயிரம் வழங்கப்படும்” என்று அமைச்சர் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய வீடமைப்பு அதிகார சபை நடைமுறைப்படுத்திவரும் வீட்டுத் திட்டத்துக்குக் கடந்த காலத்தில் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. அந்த நிதி போதாது என்று பொது மக்கள் பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதனால் அந்தத் தொகை 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிலையில் அமைச்சருக்குத் தெரியாது அமைச்சின் மேலதிகச் செயலர் புதிய சுற்றறிக்கை ஒன்றைச் சகல மாவட்டங்களுக்கும் வெளியிட்டிருந்தார்.

அதில், வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்படும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி மீண்டும் குறைக்கப்பட்டு இனிமேல் 5 லட்சத்து 50 ஆயிரமாகவே வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த விடயம் பெரும் சிக்கலாகியது.

அந்தத் தொகையில் ஒருபோதும் வீடு கட்ட முடியாது என்று அமைச்சர் சஜித் பிரேமதாசவின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். “இவ்வாறு ஒரு சுற்றறிக்கை அனுப்பிய விடயம் தனக்குத் தெரியாது என்றும், இறுதிச் சுற்றறிக்கையை அமைச்சு மீளப்பெற்று தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்'' என்றும் அமைச்சர் சஜித் கூறினார் என்று சாள்ஸ் மேலும் தெரிவித்தார். (த-105)

---

## கந்தபுராண படலப் படிப்பு பூர்த்தி நிகழ்வு

வடமராட்சி.ஜூன் 21

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தபுராணப் படலப் படிப்பு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி செய்யப்படவுள்ளது.

காலை 8 மணிக்கு வள்ளியம்மன் திருமணப்படலப் படிப்புடன் நிறைவு செய்யப்பட்டு பூர்த்திவிழா நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)

## ‘மணற்கும்மி’ நூல் வெளியீடு

கொடிகாமம், ஜூன் 21

ரஜிதா இராஜரத்தினம் எழுதிய ‘மணற்கும்மி’ நூல் வெளியீட்டு நிகழ்வு குடத்தனை மேற்கு சுடரொளி சனசமூக நிலைய மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழுத்தாளர் சு.க.சிந்துதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)


## சங்கக்கிளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வலி.வடக்குப்பிரதேசசெயலக சமுர்த்திச் சங்கத்தின் சங்கக் கிளை சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தலைவர் ஆ. உதயராஜா தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் தர்மலிங்கம் நடனேந்திரன் கலந்து கொண்டு சங்கக் கிளையைத் திறந்து வைக்கவுள்ளார். (ஐ-50)



யாழ்ப்பாணம் கல்வளை சண்டிலிப்பாய் காளி அம்பாள். ஆலய மூலத்தானத்துக்கான அடிக்கல் அண்டையில் நட்டுவைக்கப்பட்டது. நிகழ்வில். ஆலயகுருக்கள். கிராமமக்கள். பிரதேசசபைஉறுப்பினர்களஎனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ63)

## புதிய வீதி திறப்பு

கொழும்புத்துறை.ஜூன் 21

யாழ்ப்பாணம் குருசோ வீதியையும் மத்தியூஸ் வீதியையும் இணைக்கும் புதிய வீதி ஒன்று நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கிறீன்கிங்ஸ் சனசமூக நிலையம் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த வீதி அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சனசமூக நிலைய செயலர் இ.மைக்கல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட் புதிய வீதியைத் திறந்துவைத்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ஜெயசீலன், யாழ்ப்பாண பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி சி.எக்ஸ்.நேசராசா அடிகள்,மாநகரசபை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-135)

## சாராயம் விற்றவருக்கு ரூ.7,500 தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 21

கடந்த ஞாயிற்றுக்கிழமை போயா தினத்தன்று அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த கைதடியைச் சேர்ந்தவருக்குச் சாவகச்சேரி நீதிமன்று கடந்த செவ்வாய்க் கிழமை7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

பொசன் போயாவை முன்னிட்டு இரு தினங்கள் மதுபான நிலையங்கள் மூட வேண்டுமென்று அரச அறிவிப்பின்படி மதுக்கடைகள் மூடப்பட்டன. இந்த நிலையில் கைதடிப் பகுதியில் சாராயம் விற்பனை செய்யப்படுவதாக அறிந்த சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் சிவில் உடையில் சென்று அந்தப் பகுதியில் விசாரித்துள்ளனர். சந்தேகநபர் 180 மி.லீற்றர் சாராயத்தை விற்பனை செய்த போது மதுவரி நிலைய அதிகாரிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

அதனையடுத்து அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (த-9)

## வீதியைச் சீரமைக்கப் பறித்த 3 டிப்பர்கள் மணல் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண மாநகர சபையின் வீதி வேலைக்காக நல்லூர்ப் பகுதியில் பறிக்கப்பட்டிருந்த 3 டிப்பர் மண் இனந்தெரியாதோரால் ஒரே நாளில் அள்ளிச் செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது இடம்பெறும் கிராம எழுச்சித் திட்டத்தில் இடம்பெறும் வீதிப் பணிகளுக்காக யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் வீதிச் சீரமைப்புப் பணிக்கென வீதியோரம் பறித்திருந்த 3 டிப்பர் மண் நேற்றுமுன்தினம் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. இதனால் ஒப்பந்தகாரர் நட்டம் அடைந்துள்ளார்.

இருப்பினும் இரு டிப்பர்கள் நேற்று முன்தினம் பைக்கோ இயந்திர உதவுடன் அந்தப் பகுதியில் குறித்த மண்ணை ஏற்றியதாக அந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர் தெரிவித்தமைக்கு அமைய குறித்த வாகனங்களை இனம்காணும் பணியில் அயலில் உள்ள மறை காணிகளின் உதவி நாடப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-105)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு ரூ.3,50,000 தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 21

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்று 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. தண்டம் செலுத்தத் தவறின் ஒரு வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் பணித்தது. அவருக்கு எதிராகச் சாவகச்சேரிப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதி குற்றத்தை ஏற்றுக்கொண்டயடுத்து இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது. (த-9)



## பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

யாழ்ப்பாணம், சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வும், நிறுவுநர் தினமும் நேற்றுமுன்தினம் காலை பாடசாலையில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் மகேந்திரம் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில்முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்விப்பணிப்பாளர் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் நினைவுப்பேருரைகள் , மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றதுடன், திறமையை வெளிக்காட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## நினைவு தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

பேரறிஞர் கந்தமுருகேசனாரின்54ஆவதுநினைவு தினமும், அதனை முன்னிட்டு பெரிய ஐங்கரன் எழுதிய “இளங்கோவடிகளின் கவித்திறன்” நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றன.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில்இந்தநிகழ்வு கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

முதன்மைவிருந்தினராக வடமராட்சிவடக்குபிரதேச செயலர்ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்துகொண்டு நினைவுப் பேருரை நிகழ்தினார். “இளங்கோவடிகளின் கவித்திறன்” என்ற சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வு நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

நூலின் நயப்புரையை யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத் தலைவரும்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபருமாகிய ச.லலீசன் ஆற்றினார்.

நூலின்வெளியீட்டுஉரையைக் கலாசார அலுவலர்சிவமுகுந்தனும்,நன்றி உரையை சமுர்த்தி முகாமையாளர் கருணாகரனும்ஆற்றினார். (ஐ)



### பத்மநாபாவின் 29ஆம் ஆண்டு

## தியாகிகள் தினம் புதனன்று வடக்கில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் நிறுவகத் தலைவர் தோழர் பத்ம நாபாவின் 29 ஆண்டுதியாகிகள் தினம் வடக்கில் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப் பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம், புங்கன் குளம் வீதியில் அமைந்துள்ள தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் அலுவலகத்தில் முற்பகல் கட்சியின் செயலர் எஸ். குமார் தலைமையில் இது நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட தோழர்களின் உறவினர்கள் மெழுவர்த்தி ஏற்றியும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து. தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சுகு சிறிதரன், பத்மநாபா மற்றும் உயிரிழந்த தோழர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**மன்னார்**

மன்னாரில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் மன்னார் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இது கடைப்பிடிக் கப்பட்டது.

மறைந்த தோழர் பத்மநாபாவின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதன் போது வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட துணை அமைப்பாளர் பற்றிக் வினோ, கட்சியின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**வவுனியா**

வவுனியா வெளிவட்ட வீதியில் உள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முற்பகல் நிகழ்வு நடைபெற்றது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர் தோழர் ரேகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் அருந்தவராஜா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ம.தியாகராஜா ஆகியோருடன் ஈழவர் புரட்சி அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் ஜெகன் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர். ஈகைச் சுடர் ஏற்றியும் மலர் அஞ்சலி செலுத்தியும் தியாகிகள் தினத்தைக் கடைப்பிடித்தனர். அஞ்சலியைத் தொடர்ந்து மத்திய குழு உறுப்பினர் ரேகன் மற்றும் அருந்தவராஜா ஆகியோர் அஞ்சலி உரை ஆற்றினர். (து-106,56,222)

# பரு. நீதிமன்றுக்கு செல்வோரின் வாகனத்துக்கு பாதுகாப்பில்லை

### தலைக்கவசம், பணம், உந்துருளியும் திருடப்படுகின்றன இடமில்லாது தேடி அலைவதாகக் கூறுகிறது நகர சபை

பருத்தித்துறை, ஜூன் 21

பருத்தித்துறை நீதிவான் மன்றத்துக்கு வழக்குகளுக்காக வருவோர், பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. நீதிவான் மன்றத்தில் வாகனப் பாதுகாப்பு நிலையம் இல்லாததன் காரணமாகவே மக்கள் துன்பங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் மன்றத்தில் வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான இடம்இல்லை. இதனால் நீதிமன்றுக்கு பல்வேறு வழக்குகளுக்காக வருகை தருவோர் தங்களது உந்துருளிகளை வீதிகளில் நிறுத்திவிட்டு உள்ளேசெல்கின்றனர்.

நீதிமன்றுக்குள்ளே தலைக்கவசம் கொண்டுசெல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் வீதிகளில் நிறுத்தும் தமது உந்துருளிகளிலேயே மக்கள் தலைக்கவசங்களை வைத்துவிட்டு உள்செல்கின்றனர்.

அவ்வாறு உள்செல்லும் மக்கள் திரும்பி வரும் போது உந்துருளிகளில் வைக்கப்பட்ட தலைக்கவசங்களைக் காணாது சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

உந்துருளிகளில் வைக்கும் தலைக்கவசங்கள் களவாடப்படுவதால் வழக்குகள் முடிந்து வீடு செல்லும் போது பொலிஸார் மறித்து தண்டம் அறவிடுகின்றனர். காரணத்தைக் கூறும் போதும் அவர்கள் கேட்கவில்லை. இதனால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை நீதிவான் மன்றில் முன்னாலேயே பருத்தித்துறை பொலிஸ் நிலையமும் உண்டு. உந்துருளிகளில் வைக்கப்படும் தலைக்கவசங்கள் திருடப்படுகின்றமை தொடர்பாகப் பொலிஸார் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அண்மையில் வீதியில் விடப்பட்ட ஸ்கூட்டி ரக உந்துருளியின் இருக்கையை உடைத்து அதனுள் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது, மற்றுமொரு நாள் உந்துருளி திருடப்பட்டுள்ளது.

நீதிமன்றம், பொலிஸ் நிலையங்களுக்கு முன்பாகவே இவ்வாறன திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை சட்டத்தையும், நீதியையும் கேள்விக்குள்ளாக்கும் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீதிமன்றத்துக்கு வழக்குகளுக்கு வருபவர்களின் நலனில் அக்கறை கொண்டு வாகனப் பாதுகாப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்ட பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் மன்றப் பதிவாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; நீதிமன்றினுள் இடவசதி போதாது. அதனால் உள்ளே வாகனப் பாதுகாப்பு நிலையத்தை அமைக்க முடியவில்லை. மன்றுக்கு வெளியில் வாகனப் பாதுகாப்பு நிலையத்தை அமைக்குமாறும், அதற்கான இடத்தைத் தெரிவு செய்யுமாறும், பருத்தித்துறை நகரசபையினரிடம் கோரியுள்ளோம் - என்றார்.

நகரசபைத் தவிசாளரைத் தொடர்பு கொண்டபோது; பருத்தித்துறை நகரத்தில் இடம் பெரும் பிரச்சினையாக உள்ளது. பல இடங்களைத் தெரிவு செய்தோம். ஆனால் அவை அனைத்தும் தனியாருடையவை என்பதால் அவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. வாகனப்பாதுகாப்பு நிலையம் ஒன்று கட்டாயம் அமைக்க வேண்டும். இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை மாற்றுத் திறனாளிகளை நியமித்து பற்றுச் சீட்டுக்கள் அடித்து வாகனப் பாதுகாப்பு நிலையத்தை அமைப்போம். அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (து-21,26)

## கிராம அலுவலர் மீது தாக்குதல் உழவியந்திர சாரதி கைதானார்

### தாக்கிய நபர்கள் கைதாகவில்லை

கிளிநொச்சி, ஜூன் 21

மணல் திருட்டைத் தடுத்த கிராம அலுவலரைத் தர்க்கினார் என்று குற்றஞ்சாட்டப்படுவோர் இன்னும் கைது செய்யப்படவில்லை. எனினும், அதனுடன் தொடர்புடையவரென்று உழவியந்திரத்துடன் சாரதி நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு உட்பட்ட கச்சார்வெளி செல்வபுரம் கிராமத்தில் அண்மையில் மணல் ஏற்றியவர்களைத் தடுக்க சென்ற கிராம அலுவலரான பெண்ணை மண் ஏற்றியவர்கள் தாக்கி வீழ்த்தினர் என்று கிராம அலுவலர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். (து-6)



## சிறப்பாக இடம்பெற்ற சிறார்களின் சந்தை

முல்லைத்தீவு.ஜூன் 21

முல்லைத்தீவு கள்ளப்பாடு றோயல் முன்பள்ளிச் சிறார்களின் மாதிரிச் சந்தை நேற்றுமுன்தினம் கள்ளப்பாடு பொது நோக்கு மண்டப வளாகத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

முன்பள்ளியின் முதன்மை ஆசிரியர் திருமதி.ரதிக்குமார் நடேஜினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

இந்த சிறார்களுடைய சந்தையில், உள்ளூர் உற்பத்திப் பொருள்களான, நிலக்கடலை, பழவகைகள், பனங்கிழங்கு, தேங்காய்,மீன், இறால், குளிர்பானங்கள், மரக்கறிவகைகள், ஆடைகள் என்பன சந்தைப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த சிறார்களுடைய சந்தையைப் பார்வையிடுவதற்கென அதிகளவான மக்கள், கலந்துகொண்டதுடன், சிறார்களால் சந்தைப்படுத்தப்பட்ட பொருட்களையும் பெற்றுச்சென்றனர். (ஐ-246)



## குருதிக்கொடை முகாம்

மன்னார்.ஜூன் 21

குருதிக்கொடை முகாம் ஒன்று மன்னாரில் அமைந்துள்ள 'உதவிக்கரம்' நிலையத்தில் நேற்று காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2 மணிவரை நடைபெற்றது.

கறிற்றாஸ்-வாழ்வுதயம் இந்த குருதிக் கொடை முகாமை ஏற்பாடு செய்துள்ளது. குருதிக்கொடை முகாமில் பலரும் கலந்து கொண்டு குருதித்தானம் வழங்கியிருந்தனர். (ஐ-56)

## மன்னார் சர்வமத குழு நல்லெண்ணப் பயணம்

மன்னார்.ஜூன் 21

முஸ்லிம் மக்களுடன் சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்காக மன்னாரில் உள்ள எட்டு மத தலங்களுக்கு மன்னார் சர்வமத குழுவினர் நேற்றுப் பயணம் செய்தனர்.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களின் பின்னர் இலங்கை வாழ் முஸ்லிம்களை சகலரும் சந்தேக கண் கொண்டு பார்க்கின்றனர்.

இதனையடுத்து இவர்களின் துயரை துடைப்பதற்காகவும் சகோதரத்துவத்தையும் அன்பையும் மேம்படுத்துவதற்காகவும் இந்தப் பயணத்தை சர்வமதக் குழுவினர் மேற்கொண்டனர். சர்வ மதங்களையும் சார்ந்த இந்தக் குழுவானது காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இந்தக் களப் பயணத்தில் ஈடுபட்டது.



## பெருந்திருவிழா

வடமராட்சி,ஜூன் 21
பருத்தித்துறை புலோலி அருள் மிகு பார்வதவர்த்தனி சமேத பசுபதிஸ்வரர் ஆலய வருடாந்த சிவன் பெருந்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சந்திர சேகரர்ப்பட்ட திருவிழாவும்,3 ஆம் திகதி மாலை 6 மணிக்கு தியாகராஜ உற்சவமும், 4 ஆம் திகதி மாலை 6 மணிக்கு பூந்தண்டிகை உற்சவம், 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 6 ஆம் திகதி காலை 7 மணிக்கும் பிச்சாடானர் உற்சவம் இடம்பெறும்.
7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 8 ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெறும்.
பெருந்திருவிழாவை ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ வரதசாரங்க குருக்களின் உதவியுடன் கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலய முதன்மைக்குரு வேதசிவாகம வித்தியாபூசணம் சிவஸ்ரீ பரமசன்முகராஜ குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து நடத்திவைப்பார். (ஐ-173)

## 1008 சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 21
யாழ்ப்பாணம், சரவணை மேற்கு சிறி அருள் வரதகாளி அம்பாளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆயிரத்து எட்டுசங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.
ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 13 நாள்கள் திருவிழா நடைபெற்றுவருகிறது.
இந்நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8 மணியளவில் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம் வெகுசிறப்பாக இடம்பெற்று, அம்பாள் வீதி உலா வருவதும் நடைபெறும்.
இதனைத்தொடர்ந்து மாலை 6 மணியளவில் மணவளக்கோலம் நிகழ்வு இடம்பெற்று அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் உள்,வெளி வீதி வலம்வரும் நிகழ்வும் இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# பெண்கள் வாழ்வாதாரத்துக்கு மேலதிக நிதி ஒதுக்கித் தரவும்

## வடக்கு ஆளுநரின் செயலருக்குக் கடிதம்

வவுனியா, ஜூன் 21
தமது பகுதிகளிலுள்ள வசதியற்ற பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் வேலைத்திட்டங்களை மேம்படுத்தவும் பிரதேச சபையால் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. எனவே வடக்கு மாகாணத்தின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேலதிகமாக நிதி ஒதுக்கித் தாருங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரின் செயலரிடம் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை பெண் உறுப்பினர்கள் நகர சபை மண்டபத்தில் வைத்து நேற்று கடிதத்தைக் கையளித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.
கிராமத்தில் வசதியற்று வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் சுயதொழிலை மேம்படுத்தவும் பிரதேச சபையால் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என்று கடிதத்தில் கோரியுள்ளனர்.
கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஆளுநரின் செயலர், இந்த விடயம் குறித்துப் பரிசீலனை செய்கிறேன் என்று தெரிவித்துள்ளார். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்கள் திருமதி அஞ்சலா கோகிலகுமார் தலைமையில் சென்ற ஏழு பெண் பிரதேச சபை உறுப்பினர்கள் கடிதம் வழங்கினர். (த)



## பொதுச்சபை கூட்டம்

வவுனியா,ஜூன் 21
வவுனியா சமளங்குளம் சிக்கனக் கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் சங்கத்தின் தலைவி திருமதி சோ. உதயகுமாரி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவர் அ. ச. பாரதி ஆனந்தம் கலந்து கொண்டார்.
இதன்போது சங்கத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. (ஐ-222)



## ஐ.நா. திட்டப் பணிப்பாளரும் வடக்கு ஆளுநரும் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 21
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோன் ஸோரின்சன், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தால்வடக்குமாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும்செயற்றிட்டங்கள்தொடர்பில்கலந்துரையாடப்பட்டது.
போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டமாகாணமாகவடக்குகாணப்படுகிறது. இங்குவாழும்மக்களின் வாழ்க்கைத் தரத்தை பொருளாதார ரீதியாக உயர்த்தக்கூடிய திட்டங்களை செயற்படுத்துமாறு ஆளுநர்இலங்கைக்கானபணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்தார்.
இதேவேளை, வடக்கு மாகாண மக்கள்எதிர்கொண்டுவரும்தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்வுக்கு கொண்டுவருவதற்கு எடுக்கும் வடமராட்சி களப்பு திட்டம் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர், இதற்கு உதவிபுரியுமாறும் கோரிக்கை விடுத்தார்.
அதுமட்டுமன்றி, இந்தியாவில் வாழ்ந்துவரும் இலங்கை ஏதிலிகள்தொடர்பில்ஆளுநர்குறிப்பிட்டிருந்தார். குறித்த அகதிகளைமீண்டும்இலங்கைக்குஅழைத்துவருவதற்கு ஐ.நா உதவி புரியவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். இந்தியாவிலுள்ள இலங்கை ஏதிலிகள் கட்டம் கட்டமாகவே நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர். (த-7)

## ஈருருளி கையளிப்பு

கொடிகாமம், ஜூன் 21
தாய், தந்தையை இழந்து வறுமையில் கல்வி கற்றுவரும் புதுக்குடியிருப்பு கைவேலி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு ஈருருளி வழங்கப்பட்டது.
யேர்மனியில் இயங்கும் உதவும் இதயங்கள் நிறுவனத்தின் ஊடாக யேர்மனியில் வசிக்கும் சி. கதிரவனின் 13 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களது குடும்பத்தால் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-159)



## போதை ஒழிப்பு நிகழ்வுகள்

கொடிகாமம்,ஜூன் 21
போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதை ஒழிப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.
அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.
நிகழ்வில் துறை சார்ந்த அமைப்புக்கள் ,சிவில் அமைப்புக்கள், கிராம மட்ட அமைப்புக்கள், மற்றும் திணைக்கள துறை சார் அதிகாரிகள், பொலிஸார் மற்றும் மக்கள் பங்களிப்புடன் போதை ஒழிப்பு செயற்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. (ஐ-159)

## கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது

முல்லைத்தீவு,ஜூன் 21
கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை முல்லைத்தீவு கல்மடு குளப்பகுதியில் வைத்து பொலிஸ் அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.
கல்மடு குள கரியல் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த பகுதிக்குச் சென்ற அதிரடிப்படையினர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.
கசிப்பு காச்சி அதனை கானில் எடுத்து செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டார் என்று அதிரடிப்படையினர் தெரிவித்தனர். சந்தேகநபர் கல்மடு பகுதியைச் சேர்ந்தவரெனவும் இவரிடமிருந்து 15 லீற்றர் கசிப்பை கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
சந்தேகநபரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை அடுத்து சட்டநடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி3)



## லங்கா சதொச கிளை திறப்பு

முல்லைத்தீவு,ஜூன் 21
முல்லைத்தீவு மாவட்டத்தில் சதொசவின் இரண்டாவது கிளை புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட லங்கா சதொச நிறுவனத்தின் முதன்மைக் காரியாலய முகாமையாளர் கே.றணசிங்க கிளையைத் திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உபதவிசாளர் க.ஜெனமேஜயந் மற்றும் மத தலைவர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-ரி3)

## 1008 சங்காபிஷேகமும் பாற்குண்டபவனியும்

வடமராட்சி,ஜூன் 21
அல்வாய் வேலிலந்தை அருள் மிகு சிறி முத்துமாரி அம்மன் ஆலய குடமுழுக்கு தினத்தில் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகமும், பாற்குடபவனியும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளன
அன்றைய தினம் காலை 6 மணிக்கு அம்பாளுக்கு பாலாபிஷேகம் செய்வதற்காக குமிழடிவிநாயகர் ஆலயத்தில் இருந்து பெண்களின் பாற்குட பவனி ஆரம்பமாகி ஆலயத்தை சென்றடையும்.
காலை 7மணிக்கு முத்துமாரி அம்பாளுக்கு ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலாபிசேகத்துடன கூடிய மகாசங்காபிசேகம் இடம்பெறும்.
மகாசங்காபிசேத்தைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறும். (ஐ-173)

# மருத்துவத் தொழிற்சங்கங்கள் ராஜிதவுக்கு எதிராகத் திரள்வு!

கொழும்பு, ஜூன் 21

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் தன்னிச்சையான செயற்பாடுகளால் சுகாதாரத்துறைக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை சுட்டிக் காட்டி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க மருத்துவத்துறையின் பிரதான மூன்று சங்கங்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அரச ஆயுள்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரசஹோமியோபதி மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் மேற்கத்தேய மருத்துவ துறையை சேர்ந்தவர்களே ஒன்றிணைந்துள்ளனர்.

இந்த சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்புக் கடந்த புதன் கிழமை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்ததாவது:

சுகாதார துறையில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பில் தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றோம். இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுயாதீனமான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்விதமான முறையான நடவடிக்கைகளும் அரச தரப்பில் முன்னெடுக்கப்பட வில்லை. மாறாகக் காலம் கடத்தும் செயற்பாடுகளும், குற்றச்சாட்டுக்களை மறைக்கும் செயற்பாடுகளுமே காணப்படுகின்றன. சுகாதார துறையில் இடம்பெற்றிருக்கும் ஊழலானது மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியை விடவும் பாரதூரமானது. இத்தகைய ஊழல் மோசடி தொடர்பில் திறந்த பேச்சு நடத்த நாங்கள் தயாராகவுள்ளோம் - என்றார்.

(எ-31)

## வட்டுவாகல் சப்த கன்னிமாரின் பாரம்பரியப் பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜூன் 21

வட்டுவாகல் அருள்மிகு சப்த கன்னிமார் ஆலய வருடாந்த பாரம்பரிய பொங்கல் உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் வெகு கோலாகலமாக இடம் பெற்றன.

முல்லைத்தீவு, வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயம் வட்டுவாகல் கிராம மக்களுக்கு முழுமுதற் கடவுளாக விளங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

சிறப்பாக ஆகமம் சாரா முறையிலே இவ்வாலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்மனுக்கு திங்கட்கிழமை தோறும் சிறப்பு வழிபாட்டுப் பூசைகள் இடம்பெறுவதுடன், வருடாந்தம் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமித் திங்களன்று மிகவும் சிறப்பான முறையில் பொங்கல் நிகழ்வு நடைபெறும்.

இந்த வகையில் இந்த ஆண்டு பொங்கல் உற்சவம் கடந்த 10 ஆ ம் திகதி ஆரம்பமானது. ஒவ்வொரு நாளும் பொங்கல் உற்சவத்தின்போது சப்த கன்னியருக்கு சிறப்பு அபிசேக வழிபாடுகள் இடம்பெற்றன.

ஏழாம் நாள் நடைபெற்ற இறுதி நாள் நிகழ்வில் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான பக்த அடியார்கள் கலந்து சப்த கன்னிமாரின் அருளாசியைப் பெற்றுக் கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஆலயப் பரிபாலான சபையினரும் கிராம மக்களும் மேற்கொண்டிருந்தனர்.

அன்றையதினம் இரவு சிறப்பு நிகழ்வுகளான கச்சு நேருதல், வளந்து வைத்தல், பண்டமெடுத்தல், மற்றும் பொங்கல் நிகழ்வுகள் என்பன கோலாகலமாகவும், பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றன.

(ஐ-21)





## தமிழர் ஆசிரியர் சங்கம் உணவு ஒறுப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 21

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி நடைபெறும் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

சங்கம் வெளியிட்ட அறிக்கையில்,

ஜனநாயக வழிமுறைகளை மீறி நடைபெறும் செயற்பாடுகளில் கல்முனை வடக்கு உபசெயலகத்தைத் தரமுயர்த்தாமல் விட்டமையும் ஒன்று. இது வேண்டுமென்றே செய்யப்பட்டது. இனமத பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவை வழங்குகிறோம்.

இங்குள்ள பாடசாலைகளும், அங்கு கடமையாற்றுகின்ற தமிழ் பேசும் அதிபர், ஆசிரியர்களும், அங்கு வாழும் மக்களும் பல துயரங்களை அனுபவித்து வருவதனை நாம் பலகாலமாக அவதானித்து வருகின்றோம். இவை அடக்குமுறைகளால் வேண்டுமென்றே நிகழ்த்தப்பட்ட காரியங்கள் என்றே நாம் கருதுகின்றோம். இதைத் தரமுயர்த்துவதால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாது என்றுள்ளது.

(த-7)



## 'சிறகிருந்தால் போதும் சிறியது தான் வானம்' நூலுக்காக மாணவி அமுதவிழி மதிப்பளிப்பு

*அரசதலைவரிடமும் கோரிக்கை முன்வைப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 21

'சிறகிருந்தால் போதும் சிறியது தான் வானம்' என்ற சுய முன்னேற்ற சிந்தனைகளுடைய நூலை எழுதியதற்காக யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி அமுதவிழி மகேந்திரராஜ் அரசதலைவர் செயலகத்துக்கு கடந்த 18ஆம் திகதி அழைக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டுள்ளார்.

அரசதலைவரும் நூலின் ஒரு பிரதியைப் பெற்றிருந்தார். அனைத்துத் தமிழ் பாடசாலைகளினதும் நூலகத்தில் தனது நூலின் ஒவ்வொரு பிரதியை மாணவர்கள் பயன்படும் வகையில் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு மாணவி அரசதலைவரிம் கேட்டிருந்தார்.

தனது புத்தாக்க புதிய சிந்தனையின் வெளிப்பாடாக 17 ஆவது வயதில் சமூக சீரழிவுகளைத் தடுத்து போதை யை ஒழித்து நற்பண்புகளை மாணவர்கள் மனதில் விதைக்கும் சுயமுன்னேற்ற சிந்தனைகள் அடங்கியதாக 'சிறகிருந்தால் போதும் சிறியது தான் வானம்' என்ற நூலை வெளியிட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த தை மாதம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் தலைமையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் வருமானம் முழுவதையும் சிறுவர் இல்லத்துக்கு நன்கொடையாக வழங்கினார். முத்துதம்பி சிறுவர் இல்லத்துக்கு நன்கொடையாக 50 ஆயிரம் ரூபா வழங்கியிருந்தார். போரில் தந்தையை இழந்த சிறுவர்களுக்கான உதவிகளையும் செய்தார்.

அவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9 'A'சித்திகளைப் பெற்றுக்கொண்டவர். கட்டுரை, இலக்கிய நயத்தல் போட்டியில் வடக்கு மாகாணத்தில் தங்கப்பதக்கத்தையும் அகில இலங்கை ரீதியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். மகேந்திரராஜ் அமுதவிழியின் தந்தை போரில் காணாமல் போயிருந்தார். தனது தந்தையையும் உறவுகளையும் போரில் இழந்து அந்த அனுபவங்கள் தந்த வலிகளுடன் தான் தொலைத்த இடத்திலேயே மீண்டெழுந்து தனது சாதனைகளைத் தொடர வேண்டும் என்ற விருப்புடன் செயற்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த)

# கடந்த அரசின் செயற்பாட்டாலேயே துறைமுக நகரத்திட்டத்தில் தாமதம்

*ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு நகரத் திட்டத்துக்கு வழங்கப்பட்டிருந்த காணியில் 50 ஏக்கர் காணியைக் கடந்த அரசு வெளிநாட்டு நிறுவனத்துக்கு உரித்துரிமையாக வழங்க ஒப்பந்தம் செய்திருந்தது. அதை எமக்குரிய காணியாக மாற்றியமைத்து ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதால்தான் அதன் வேலைத்திட்டம் தாமதமாகியது என இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்ட மூல மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு துறைமுகநகர வேலைத்திட்டம் அரின் முறையற்ற நடவடிக்கையால் இரண்டுவருடங்கள் பிற்படுத்தப்பட்டன என்றும், அவ்வாறு இடம்பெறவில்லை என்றிருந்தால் அதன் மூலம் பாரிய நன்மைகளை அடைந்திருக்க முடிந்திருக்கும் என எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்திருந்தார். எதிர்க்கட்சி உறுப்பினர் தெரிவித்ததுபோல் குறிப்பிட்ட காலம் வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டிருந்து.

கடந்த அரசு காலத்தில் கொழும்புத் துறைமுக வேலைத்திட்டத்துக்காக வழங்கப்பட்டிருந்த காணியில் 50 ஏக்கர் காணி வெளிநாட்டு கம்பனி ஒன்றுக்கு உரித்துரிமையாக வழங்க இணக்கம் தெரிவித்திருந்தது எமது காணிகளை வெளி நாடுகளுக்கு வழங்குவதில்லை என்பது தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. அதனால்தான் குறித்த 50 ஏக்கர் காணியை எமது அதிகாரத்துக்கு கீழ் மீண்டும் பெற்றுக்கொள்ள புதிதாக ஒப்பந்தம் செய்யவேண்டி ஏற்பட்டது. அதற்கு குறிப்பிட்ட காலம் சென்றது.

அதனால்தான் இரண்டு வருடகாலம் கொழும்பு துறைமுக வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. வேலைத்திட்டம் குறிப்பிட்ட காலம்பிற்படுத்தப்பட்டாலும் நாட்டின் எதிர்காலத்திற்காகவே அது மேற்கொள்ளப்பட்டதையிட்டு நாங்கள் திருப்தி யடைகின்றோம்.

எனினும் உரிய காலத்துக்கு துறைமுக வேலைத்திட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்றோம். தற்போது சட்டமியற்றும் நட வடிக்கையே மேற்கொள்ள இருக்கின்றது - என்றார்.



(எ-31)

# மோதல் வெடிக்கின்ற நிலையில்கூட அரசு வாய்மூடி இருந்தால் நல்லிணக்கம் வருமா?

## நாடாளுமன்றில் சாந்தி எம்.பி. கேள்விக்கணை

கொழும்பு, ஜூன் 21

தமிழ் மக்களின் எவ்வளவோ பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளன. அதற்காகப் போராட்டங்களும் தொடர்கின்றன. அரசியல் செயற்பாடுகளுக்காக உரிய சட்டங்களை, நியதிகளை, சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்தாது மக்களிடையே வக்கிரத்தன்மையையும் மோதல்களையும் ஏற்படுத்துகின்ற வகையில் வாய் மூடி அரசியல்வாதிகள் இருப்பது இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துமா?



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன திருத்தச் சட்ட மூல விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி மீட்டல் என்பதில் யாரிடமிருந்து யார் காணியை மீட்பது என்ற கேள்வியை வடக்கு -கிழக்கு பகுதியை மையமாகக்கொண்டு கேட்க வேண்டியுள்ளது. அங்கு மக்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறு விதமான அதிகார சபைகளால், திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. கேப்பாப்பிலவுக் காணி மீட்புப் போராட்டம் பன்னாட்டுப் புகழ் பெற்றதாகிவிட்டது. இரண்டு வருடங்களுக்கும் மேலாக அந்தக் காணிகளுக்குரிய ஆவணங்களை மக்கள் வைத்துக்கொண்டு இராணுவத்திடமிருந்து தமது காணிகளை குளங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறிருக்க மக்கள் விவசாயத்தில் முன்னேறுவது எப்படி?

### கால் நடை வளர்ப்பு

இது சிறந்த வருமானம் தரும் தொழிலாக இருந்தாலும் கால்நடைகளைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு மேய்ச்சல் தரைகளை ஒதுக்குமாறு கேட்கின்றபோது அவை கையகப்படுத்தப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்புகளிலிருந்து தமது காணிகளை மீட்டெடுக்க வேண்டிய நிலையிலேயே வடக்கு, கிழக்கு மக்கள் இன்றுள்ளனர்.

### சட்டம்

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் மீண்டெழுந்து தொழில் செய்கின்றபோது பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் ஒரு பெண் 10 பெண்களுடன் தையல் கடை நடத்துகின்றார். கடையை நாலடியிலிருந்து பெரிதாக அமைக்க, ஒரு கொட்டகை அமைக்க சட்டம் இடம்கொடுக்கவில்லை. ஆனால் மக்களுக்குச் சொந்தமான 1000 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட காணிகள் கையகப்படுத்தப்பட்டமை எப்படி?

### தமிழரின் படுக்கை அறையில்கூட எல்லைக் கல் வைக்கும் நிலை

வனவளத்திணைக்களத்தின் காணிகள் கையகப்படுத்தல் வடக்கு- கிழக்கில் தலைவிரித்தாடுகின்றது. தமிழ் மக்களின் படுக்கை அறைகளில் கூட தமது நிலம் என்று எல்லைக்கல் வைக்கும் அளவுக்கு நிலமை உள்ளது.

### அமைச்சர்கள் என்ன செய்கிறீர்கள்?

முல்லைத்தீவு மாவட்டத்தில் பேசு பொருளாக இருக்கும் விடயம் செம்மலை நீராவிப்பிள்ளையார் ஆலய பிணக்கு. பல அமைச்சர்கள் வருகின்றீர்கள். பல ராஜதந்திரிகள் அங்கு வருகின்றார்கள். இந்தக் கோவில் பரம்பரையாக தமிழ் மக்களாலேயே வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வரும் பிள்ளையார் கோவில். இந்தக்கோவிலில் அந்த மக்களை அபிவிருத்தி வேலைகளை செய்ய விடாது இந்தக்கோவிலின் அருகாமையில் ஒரு பௌத்த சிங்களக் குடும்பம் கூட இல்லாத நிலையில் அங்கு புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த புத்தர் சிலை அமைக்கப்படும்போதே நாங்கள் எத்தனையோ தடைவைகள் அரசதலைவர், தலைமை அமைச்சர் மட்டங்களில் கூறி இது பொருத்தமற்ற வேலை, இது இன,மத முரண்பாட்டை தோற்றுவிக்குமென்று முறைப்பாடு செய்திருந்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே ஏன்?.

### அநீதிக்கு நீதி கோருகிறோம்

இந்த அநீதிக்கு நீதி கேட்டு எமது மக்கள் நீதிமன்றம் சென்றார்கள். இரு தரப்பினரும் முரண்பாடுகளை ஏற்படுத்தாது வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றுதான் நீதிமன்று தீர்ப்பு கொடுத்துள்ளது.

அனுராதபுரத்திலிருந்து வலுக்கட்டாயமாக சிங்கள மக்களை பேருந்துகளில் கொண்டுவந்து அங்கு தேரர்களும் சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நீதிக்கு, நியாயத்துக்கு கட்டுப்படாது எங்களது பூர்வீகமான வழிபாட்டு இடங்களை சிதைக்கின்ற, மழுங்கடிக்கின்ற வகையில் சட்டத்துக்கு முரணாக ஏன் செயற்படுகின்றீர்கள்?

மாங்குளம் நகர அபிவிருத்தித் திட்டத்துக்கான பல்வேறு முனைப்புக்கள் தூங்கும் நிலைக்குச் சென்றுள்ளன.

### தரமுயர்த்துங்கள்

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு இனம்,மதம் கடந்து உணவு ஒறுப்புப் போராட்டம் நடக்கின்றது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுங்கள்- என்றார். (து-31)

# கொழும்பில் மற்றொரு துறைமுக நகரம் வரும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21



கொழும்பு துறைமுக நகரை போன்று கொள்ளுப்பிட்டி தொடக்கம் தெகிவளை வரையில் துறைமுக நகர் ஒன்று சர்வதேச முதலீட்டில் உருவாக்கப்படவுள்ளது என்று மேல் மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம்நடந்த இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நகர அபிவிருத்தி விடயத்தில் அரசு அதிக அக்கறை செலுத்தி வருகின்றது. கால நிலை நிலமைகளைக் கருத்தில் கொண்டும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்யவும் அதிக நிலம் எமக்கு தேவைப்படுகின்றது. நிலங்களை நிரப்பி கட்டடங்களை முறையாக அமைக்க எமக்கு நிலம் தேவை உள்ளது. அதனை இன்று நாம் முன்னெடுத்து வருகின்றோம். முறையான அபிவிருத்தியை செய்யவே நாம் எதிர்பார்க்கின்றோம். உலக வங்கியின் நிதி உதவியில் இப்போது இலங்கையில் பிரதான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுரங்கப்பாதைகள் இரண்டு அமைக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஒன்றுவட கொழும்பில், மற்றையது சுதந்திர சதுக்கம் தொடக்கம் பம்பலப்பிட்டி வரையில். அதேபோல் நிலத்தடி மற்றும் நிலத்தின் மேல் செல்லக்கூடிய இரண்டு நீரோடைகள் அமைக்கும் வேலைத்திட்டங்கள் இப்போதே நிறைவடைந்துள்ளன. கொழும்பு குப்பை அகற்றும் நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் குப்பையில் மின்சாரம் உற்பத்தி செய்யும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மேலுமொரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது. குப்பைமுகாமைத்துவம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆகவே அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். அதேபோல் துறைமுக நகர் தொடர்பிலான வேலைத்திட்டத்தை பொறுத்தவரை எமது கடல் பரப்பை பாதுகாக்க சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கடல்சூழல் பாதிப்பு என்ற விடயங்களைகூறி சிலர் மக்களை அச்சுறுத்தி குழப்பினர். எனினும் எந்த பாதிப்பும் இல்லாத வகையில் கடல் பரப்பில் இன்று 700 ஏக்கர் பரப்பை நிலமாக்கியுள்ளோம். எமது அடுத்தகட்ட வேலைத்திட்டமாக கொள்ளுப்பிட்டி தொடக்கம் தெகிவளை வரையில் மேலும் 160 ஹெட்டேயர் கடல் பரப்பை நிரப்பி நிலமாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வுள்ளோம். எதிர்காலத்தில் கடல்நகர் ஒன்றை உருவாக்க பன்னாட்டு முதலீட்டில் முன்னெடுக்கவுள்ளோம்- என்றார். (எ-31)

# சுற்றாடல் அதிகார சபை தலைவர் தேவப்பிரிய



கொழும்பு, ஜூன் 21

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவராக, இசுர தேவப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவராக, ஏ.ஜே.எம். முஸம்மில் பதவி வகித்து வந்த நிலை யில், அவர் மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இசுர தேவப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இவர் எதிர்வரும் சில தினங்களில் தனது கடமைகளை பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ)**

# கருத்துச் சுதந்திரத்துக்கு புதிய சட்டத்தால் ஆபத்து

## விளக்கமளிக்கக் கோருகிறது சுதந்திர ஊடக இயக்கம்

கொழும்பு, ஜூன் 21

சகவாழ்வு மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தவறான செய்தி வெளியீடு மற்றும் வெறுப்பு பேச்சு ஆகியவற்றில் ஈடுபடுவோருக்கு அபராதம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் தண்டனைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை திருத்துவது தொடர்பாக முன்வைக்கப்பட் டுள்ள அமைச்சரவைப் பத்திரத்தால், கருத்துச் சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நீதி அமைச்சுக்கு சுதந்திர ஊடக இயக்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

உண்மைக்குப் புறம்பான செய்திகள் மற்றும் வெறுப்புரைகள் நாட்டில் தற்போது பெரிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது என்பதையும் அவற்றை தடுப்பதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்பட வேண்டும் என்பதுவும் சுதந்திர ஊடக இயக்கத்தின் நிலைப்பாடா கும்.

இது தொடர்பாக சில சட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன என்பதையும், அச்சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படவில்லை என்பதையும், அடிப்படையின்றி பல்வேறு தரப்பினரின் அவசியத்துக்கேற்ப அவை பயன்படுத்தப்படுவதையும் சுதந்திர ஊடக இயக்கம் அவதானித்து வருகிறது.

சக்திக சத்குமார என்ற எழுத்தாளர் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு இரண்டரை மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் இருக்கின்றார். பத்திரிகையாளர் குசல் பெரேரா எழுதிய செய்தித்தாள் கட்டுரை தொடர்பாக அதே சட்டத்தின் கீழ் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முன்மொழியப்பட்ட புதிய சட்டம் குறித்து இதுவரை முறையாக தெளிவுபடுத்தப்படவில்லை. ஒரு செய்தி உண்மைக்கு முரணானது அல்லது வெறுக்கத்தக்கதா என்பதை தீர்மானிப்பது யார்? அதற்கான தகுதிகள் என்ன? இதற்குள் கருத்துச் சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை மீறாமால் இருப்பதற்கான நடைமுறைகள் யாவை? இவை அனைத்தும் கடும் பிரச்சினைகளாகவே உள்ளன.

இந்தப் பின்னணியில், முன்மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தம் இந்நாட்டில் கருத்து சுதந்திரத்துக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என்று சுதந்திர ஊடக இயக்கம் கருதுகிறது - என்றுள்ளது. (ஒ.5)

# இயந்திர சங்கிலி வாளை தடைசெய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் இடம்பெறும் வன அழிப்பைத் தடுக்கும் நோக்கில் இயந்திர சங்கிலி வாள் இறக்குமதியைத் தடை செய்வதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரையில் நாட்டில் வனப்பகுதி மொத்தக் காணியில் 29.7 சதவீதமாக அமைந்துள்ளது. 2030ஆம் ஆண்டளவில் இத்தொகையை 32 சதவீதமாக அதிகரிக்கும் நோக்கில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அனுமதியற்ற ரீதியில் மரங்களை அழித்தல் காடுகள் அழிவதற்கு முக்கிய விடயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் இந்த வன அழிப்புக்காக இலகுவாக கொண்டு செல்லக்கூடிய இயந்திர சங்கிலி வாள் பெருமளவில் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 82 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இயந்திர சங்கிலி வாள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வன அழிப்பை தடுப்பதற்கும் வனத்தின் அளவை அதிகரிக்கும் நோக்கில் இயந்திர சங்கிலி வாள் இறக்குமதியை தடை செய்வதற்காக 1969 ஆம் ஆண்டு இலக்கம் ஒன்றின் கீழான ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் தேவையான நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. (எ-61)

புதுடில்லி செல்ல முன்

# தீர்வு தாமதமாவது குறித்து நாடாளுமன்றில் விவாதம்!

## கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, ஜூன் 21

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்துவதற்காகப் புதுடில்லி செல்வதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு தாமதமாவது குறித்து நாடாளுமன்றத்தில் இரண்டு நாள்கள் விவாதம் நடத்தக் கோருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இன்று சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெறும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த இரண்டு நாள்கள் சிறப்பு விவாதத் துக்கான கோரிக்கையைக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முன்வைத்து, அதற்கான திகதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளவும் நேற்றுமுன்தினக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு இணக்கமான சுமுகத் தீர்வு எட்டுவதற்கு விடுதலைப்புலிகளே முட்டுக்கட்டை என்று தென்னிலங்கையால் முன்னர் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வந்தது.

இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகள் முறியடிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், இன்னமும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு காணாப்படவே இல்லை. காணப்படும் என்ற நம்பிக்கையும் அருகி வருகின்றது. தீர்வுக்கான இணக்கமும், வாய்ப்பும் இந்த நாடாளுமன்றத்திலேயே உருவான பின்னரும், அது நடைமுறைக்கு வராமல் போனமைக்குக் காரணம் யாது? என்ற கேள்வியின் அடிப்படையில் இத்தகைய சிறப்பு விவாதம் ஒன்றுக்குக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுக்க வேண்டும் என கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முதலில் நாடாளுமன்றத்தில் இது குறித்த சிறப்பு விவாதத்தில் தமிழர் தரப்பின் ஆதங்கங்கள், நீதியான எதிர்பார்ப்புகள் போன்றவற்றைப் பகிரங்கப்படுத்துவது என்றும், பின்னர் அடுத்த கட்டமாக, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி உட்பட பன்னாட்டுச் சமூகத்தின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை நேரில், தமிழருக்கு நீதியான தீர்வு வழங்கப்படாமல் இழுத்தடிக்கின்றமை குறித்து தெளிவுபடுத்தி பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தை ஆழமாகத் திருப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ம)

# தரமுயர்த்துமாறு முஸ்லிம் போராடலாம் தமிழர்கள் போராடுவது மட்டும் தவறோ?

## அமைச்சர் மனோகணேசன் கேள்வியெழுப்புகிறார்

கொழும்பு, ஜூன் 21



சாய்ந்தமருது, ஏற்கனவே தனியொரு பிரதேச சபையாக மாற்றப்பட்டு சாய்ந்தமருது பள்ளிவாசல் தலைவர்கள் தலைமையில் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள், தமது பிரதேச சபையை கல்முனை மாநகரசபைக்கு முற்றிலும் வெளியே பிரித்தெடுத்து முழுமையான நகரசபையாக்கும்படி போராடுகிறார்கள்.

அதுபோல் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்த கோரி தமிழர்கள் போராடுவதில் என்ன தவறு உள்ளது?.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்தின் மையப் புள்ளியாக மாறியுள்ளது. எனவே கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தும் நீண்டகால கோரிக்கைக்கு உடன்பட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

கல்முனை வடக்கு, சாய்ந்தமருது, கல்முனை தெற்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதுதான் கல்முனை மாநகர சபை. இதில் சாய்ந்தமருது, கல்முனை தெற்கு ஆகியனவற்றில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் போது, கல்முனை வடக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

கல்முனை வடக்கு தமிழர்களின் போராட்டத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாட்டுக்கும், அரசுக்கும் தர்க்கரீதியாக காரணத்தை எடுத்து கூற வேண்டு.

இந்தப் பிரச்சினை தொடர்பில் துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்தனவுடன் தேசிய ஒருமைப்பாட்டு துறைசார் அமைச்சர் என்ற முறையில் கலந்தாலோசித்துள்ளேன். அம்பாறை மாவட்ட அமைச்சரவை அமைச்சர் தயா கமகேயும் நானும் இதுபற்றி பேசியுள்ளோம். இதை இனியும் தொடர்ந்து நீடிக்க விடுவது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைந்துவிடும் என இவர்களுக்கு தெரிவித்துள்ளேன்.

கிழக்கில் தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியில் இந்தப் பிரச்சினை மெல்ல பூதாகரமாகிக் கொண்டு வருகிறது. இதைப் பார்க்காமல், கேட்காமல், ஆராயாமல் இருப்பது பொறுப்பற்ற செயல். (த)

# யாழ்ப்பாண நகர பெரு அபிவிருத்தி திட்டங்கள் கிடப்பில் உள்ளமை ஏன்?

## அவற்றை மிக விரைவில் செயற்படுத்துமாறு மாகாண முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண நகர பெரும் அபிவிருத்தித் திட்ட அபிவிருத்திகள் சம்பந்தப்பட்ட தரப்பினரின் அக்கறையின்மையால் இழுபறியில் காணப்படுகின்றன. இவற்றுக்கென்று ஒதுக்கிய நிதி பிற மாவட்டங்களுக்குச் செல்லவில்லை என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளதால், நகர பெரு அபிவிருத்தித்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண வணிகர் கழக உபதலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இ.ஜெயசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உலக வங்கியின் நிதி உதவியுடன் பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2016 ஆம் ஆண்டு 54 மில்லியன் அமெரிக்க டொலரில் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது. அதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக இருக்கும் காரணங்கள் தொடர்பாக இந்தத் துறை சார்ந்த அனைவரினதும் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1. யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட குளங்களுக்கும் கொக்குவிலில் அமைந்துள்ள நந்தாவில் குளம் உட்பட 41 குளங்களைச் சீரமைத்து இணைப்பு வடிகால்கள் ஏற்படுத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 7 குளங்களைச் சுற்றி அழகுபடுத்தல்.
2. யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சீரமைத்து அழகுபடுத்தல் (கோட்டைப் பூங்கா).
3. நகரத்தின் முக்கிய வீதிகளில் ஈருருளிகள் பயணிக்கவென்று பிரத்தியேக பாதை அமைத்தல்.
4. நகரத்தில்உள்ளமுக்கியவீதிகளுக்கு அருகாமையில் நடைபாதை அமைத்தல்.
5. போதனா மருத்துவமனை வீதி அகலமாக்கப்பட்டுச் சீரமைத்தல்.
6. பழைய பூங்கா மற்றும் பழைய கச்சேரிகளைச் சீரமைத்தல்.
7. பழைய புராதன இடங்களைச் சீரமைத்தல்.
8. நகரத்தில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் நவீன முறையில் மலசல கூடங்கள் அமைத்தல்.
9. யாழ்ப்பாண மாணகர சபைக்குட்பட்ட வடிகால்களைப் புதிதாக அமைப்பதற்கும் சீரமைப்பதற்குமான 'மாஸ்டர் பிளான்' வரையப்பட்டு வழங்கல்.
10. யாழ்ப்பாண மாநகர அபிவிருத்திக்கான முழுமையான மாஸ்ரர் பிளான் தயாரித்து வழங்குதல்.
11. சங்கிலியன் பூங்கா, கடல் நீரேரிப் பூங்கா மற்றும் சிறு பூங்காக்கள் அமைத்தல்.

மேலும் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் உள்ளது.

அரச அதிகாரிகள், பொது அமைப்புக்கள், துறை சார் நிபுணர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள் போன்ற அனைவராலும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் பின்பு இந்தத் திட்டம் சம்பந்தமான ஆய்வுகள், வரைபடம் தயாரித்தல் என்பன முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் இந்தத் திட்டம் மந்த கதியிலேயே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இதற்குரிய நிதியின் பெருந்தொகை ஆய்வுக்கும் வேறு விடயங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறதே தவிர, இந்தத் திட்டத்துக்குத் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி வேறு மாகாணங்களுக்கு மாற்றப்பட்டதாக அறிகின்றேன். இது சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நான் கேள்வியெழுப்பினேன். பணம் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்ட போருக்குப் பின்னர் யாழ்ப்பாண நகரை நவீன முறையில் அபிவிருத்தி செய்வதற்கு இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவது மேல் மாகாணம் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு. அந்த அமைச்சும் அக்கறையின்றிச் செயற்படுகின்றது.

இந்தத் திட்டங்களை செய்து 2021 ஆம் ஆண்டுக்குள் முடிவுறுத்தவேண்டும். குறித்த அமைச்சும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் உரிய நடவடிக்கைகளை விரைவாகச் செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது.

இது பற்றி யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனிடம் கேட்ட போது, "குறித்த திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதியின் ஊடாக மேல் மாகாணம் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இதை முன்னெடுக்கும் பணிகளைக் குறித்த அமைச்சுத்தான் இனி மேற்கொள்ள வேண்டும். இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். எனினும், பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை" என்று தெரிவித்தார்.

(த-105)

# வானிலிருந்தவாறு எல்லையிட்டு காணிகளைப் பறித்தது பெருந்தவறு

## சிவமோகன் எம்.பி. விசனம் தெரிவிக்கிறார்

மன்னார், ஜூன் 21

2009இல் மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் 2010ஆம் ஆண்டு வனவளத்துறையை சார்ந்தவர்கள் வானூர்திகளில் இருந்து கொண்டு கூகுள் வரைபடம் மூலம் வனவளப் பிரிவுகளுக்கான எல்லையைத் தயாரித்திருந்தனர். இவர்கள் திரும்பிச் சென்று பார்த்த பொழுது தமிழ் மக்களின் பெருந்தொகையான நிலங்கள் வனவளப்பிரிவினர் வகுத்த ஏல்லைக்குள் சென்றுவிட்டன. இந்த நடைமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது. மாற்றம் செய்ய வேண்டும்.

இவ்வாறு தழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் இயங்கும் வனவளத் திணைக்களம் அரச நடைமுறையைக் கடைப்பிடிக்காமல், வனத்தை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் தமிழர்களின் காணிகளை அபகரித்து வைத்துள்ளது. இதனால் தமிழர்கள் தங்களது காணிகளில் எந்தவித அபிவிருத்திகளும் செய்யமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

வனவளப்பிரிவு தமக்குரிய எல்லைகளை வரையறை செய்வதாக இருந்தால் அந்த விடயத்தில் அந்த இடங்களில் பிரதேச செயலர், நில அளவைத் திணைக்களம், கிராம அலுவலர், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். இவர்கள் அனைவரும் சேர்ந்து எல்லை இடுவது தான் வனவளப்பிரிவின் எல்லை வரையறை நடைமுறை. கடந்த வருடம் விசுவமடு, புதுக்குடியிருப்பு, சுதந்திர புரம் ஆகிய இடங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகள்கூட இன்று வனவளப்பிரிவின் எல்லைக்குள் இருக்கின்றன.

அந்த இடங்களுக்குச் சென்று பார்த்தால் கடந்த காலத்தில் மக்கள் வசித்த அடையாளங்களான வீடுகள், கிணறுகள், கட்டட இடிபாடுகள் போன்றன காணப்படுகின்றன. இதே நிலமை தான் மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் காணப்படுகிறது - என்றார். (த-213)

# மகிந்த தலைமையிலான அரசு 19ஆவது திருத்தத்தை ஒழிக்கும்

## ரஞ்சித் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 21

முத்துறையிலும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ள அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் மீள்பரிசீலனை செய்யாது. ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து 19ஆவது திருத்தம் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் தி சொய்ஸா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச நிர்வாகத்திலும், முத்துறை அதிகாரங்களிலும் பல நெருக்கடியினையும் ஏற்படுத்தியுள்ள அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். கடந்த வருடம் முழு அரசமைப்பையும் இந்த் திருத்தம் சவாலுக்குட்படுத்தியது.

19ஆவதுஅரசமைப்பில்முரண்பாடானபலஏற்பாடுகள்காணப்படுகின்றன. எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களும் அரசியலில் பிரவேசிப்பதற்கு தடைகளை அரசமைப்பின் ஊடாக ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டமிடலின் ஊடாகவே 19ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. ஒரு தரப்பினரை இலக்கு வைத்து செய்த சதி இன்று அனைவருக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முரண்பாடான ஏற்பாடுகளுக்கு நீதிமன்றத்தில் பொருள்கோடலைக் கோரி திருத்தங்களைமேற்கொள்ள பல முறை அரசிடம் எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை. ஐக்கிய தேசிய கட்சி தமது அரசியல் தேவைகளுக்காகவே 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முன்னெடுத்து செல்கின்றது.

2020ஆம் ஆண்டு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசே அமைக்கப்படும். பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ள 19ஆவது திருத்தம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு தேவையான அரசமைப்பு உருவாக்கப்படும்- என்றார். (எ-31)

# பெரமுனவின் வேட்பாளரை மகிந்த விரைவில் கூறுவார்

## ரத்நாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

பரந்துப்பட்ட கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன என்பது சுதந்திர கட்சியின் தனிப்பட்ட தீர்மானமாகும். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் யார் என்பதை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச வெகுவிரைவில் அறிவிப்பார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையிலான பரந்துப்பட்ட கூட்டணி வெற்றிப் பெறுமா, தோல்வியடையுமா என்பது எதிர் பார்க்கப்படுகின்றது. பரந்துப்பட்ட கூட்டணி வெற்றிப் பெற்றதும் உத்தேசிக்கப்பட்டுள்ள அரச தலைவர் தேர்தலில் இந்நாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வேட்பாளர் என்றும், அதனை தொடர்ந்து அமைக்கவுள்ள அரசில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் என்றும் சிறிலங்கா சுதந்திர கட்சி யின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட தீர்மானமாகும்.

எவரது தலைமைத்துவத்திலான அரசு உருவாக வேண்டும் என்பதை பெரும்பாலான மக்கள் தீர்மானித்து விட்டார்கள். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யால் தனித்து தேர்தலில் போட்டியிட்டுவெற்றிப்பெறமுடியாது என்ற கருத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இடம்பெற்றுமுடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி எவருடனும் கூட்டணியமைக்காமல் இரண்டு பிரதான் கட்சிகளுக்கும் சவால் விடுத்து போட்டியிட்டது. கிடைக்கப் பெற்ற தேர்தல் பெறுபேறுகள் அரசின் முறையற்ற செயற்பாடுகளுக்கு கிடைத்த ஒரு பதிலடி நாட்டு மக்கள் அன்று அரசியல் ரீதியில் செய்த தவறை மீண்டும் செய்ய மாட்டார்கள்- என்றார். (எ-61)

# கொள்ளையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 21

பேருவளை, பயாகல பகுதியில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் உள்நாட்டு துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் கொள்ளையிட்ட உந்துருளி என்பவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட சுற்றி வளைப்புகளின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 13 ஆம் திகதி மொரகஹஹேன பகுதியில் துப்பாக்கியொன்றை காண்பித்து 2 இலட்சத்தி 10 ஆயிரம் ருபாய் பெறுமதியான உந்துருளிஒன்றைக்கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணை களின் அடிப்படையிலேயே சந்தேகநபர்கைது செய்யப்பட்டுள்ளார்.இதனைதொடர்ந்து இவர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மொரகஹஹேன பொலிஸாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு 19 வருடங்கள்சிறையில்தடுத்துவைக்கப்பட்டவர் எனவும், பின் மேன்முறையீடொன்றின் மூலம் 3 மாதங்களுக்கு முன் விடுதலை ஆகியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை சந்தேக நபருக்கு எதிராக கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள்தொடர்பில்நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம் பெற்றுவருகின்றனஎன்றும் தெரியவந்துள்ளது.(எ-61)

# உபயோகிக்காத அரச காணியை வனங்களாக மாற்ற நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

அரச நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத காணிகளை வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் துரித பாதுகாப்பு வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வனப் பிராந்தியங்கள் உள்ளடங்கலாக நாட்டின் மொத்தக் காணியின் அளவு 29.7 சதவீதமாக உள்ள நிலையில், எதிர்வரும் 2030ஆம்ஆண்டாகும்போதுஅதனை 32 சதவீதமாக விரிவுபடுத்து வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 48 ஆயிரம் ஹெக்டேயர் காணியை வனநிலப்பகுதியாக விரிவுபடுத்துவதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது.

இந்த இலக்கை எட்டுவதற்கு வனப்பாதுகாப்புத் திணைக்களத்திடம் உள்ள காணியின் அளவு மாத்திரம் போதுமானதல்ல என்பதால், ஏனைய அரச மற்றும் தனியார் காணிகளையும் இந்த வேலைத்திட்டத்துக்குப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகளில் பொருளாதார பயிர்ச்செய்கைக்கு அப்பால் 65 சதவீத வனப்பகுதியைப் கொண்டுள்ள காணிகள், இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் காணிகளில் கலப்பு வன வளர்ப்பு வேலைத் திட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்ட காணிகள் என்பன வனப்பாதுகாப்புத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வனப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்துக்கென மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்துறை அமைச்சால் சுவீகரிப்பட்டவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-31)

# துமிந்தவிடமிருந்து கைபேசிகள் மீட்பு!

கொழும்பு, ஜூன் 21

வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை கைதியான துமிந்த சில்வாவின் அறையில் இருந்து நான்கு கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சாதாரணகையடக்கதொலைபேசிகள் இரண்டும்ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் இரண்டும்சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், கைப்பற்றப்பட்ட கையடக்க தொலைபேசிகளை சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சிறையில் உள்ள துமிந்த சில்வாவின் செல்பி ஒளிப்படம் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது. (எ)

# அவசர காலச் சட்டத்தை அரசு அரசியலுக்கு பயன்படுத்துகிறது

## குற்றஞ்சாட்டுகின்றார் தினேஷ் எம்.பி.

கொழும்பு, ஜூன் 21

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியதாக குறிப்பிடும் அரசு ஏன் அவசரகாலச் சட்டத்தை நீக்கவில்லை. அவசரகால சட்டத்தை அரசு தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தில் அடிப்படைவாதிகளால் நடத்தப்பட்ட குண்டு தாக்குதல் நாளையுடன் இரண்டு மாதங்களை எட்டியுள்ளது. இடைப்பட்ட காலத்தில் பாதுகாப்பு தரப்பினர் குண்டுதாரிகள் தொடர்ந்து முன்னெடுக்கவிருந்து சதி திட்டங்களை முறியடித்துள்ளதுடன், பலர் சந்தேகத்தின் அடிப்டையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்ற காரணத்துக்காக மாத்திரமே நிபந்தனைகள் அற்ற விதத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கினோம். இதற்கமைய அவசரகால சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இரண்டு மாத காலமாக நடைமுறையில் உள்ளது. கடந்த மாதம் அவரகால சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பலாம் என்று குறிப்பிடும் அரசு தொடர்ந்து அவசரகால சட்டத்தை நடைமுறைபடுத்தவே முயற்சிக்கின்றது. தமது அரசியல் தேவைகளுக்காக அவசர கால சட்டம் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது.

அவசரச்கால சட்டம் நடைமுறையில் உள்ளமையால் அரசுக்கு எதிராக தொழிற்சங்கத்தினர் போராட்டங்களை முன்னெடுக்கவும், பொது மக்கள் பொது இடங்களில் ஒரு தேசிய தினம் தொடர்பில் கூட்டங்களை கூட்டவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலமைகள் அரசுக்குச் சாதகமாக காணப்படுகின்றன.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவசரகால சட்டத்தை அரசு உடனடியாக நீக்கவேண்டும். அவசரதேவைகளுக்காக பயன்படுத்த வேண்டிய சட்டங்களை அரசியல்தேவைகளுக்கு பயன்படுத்த இடமளிக்க முடியாது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு பிரதானிகளையும், புலனாய்வு பிரிவினரையும்பிரத்தியேகமானமுறையில் அழைத்து பேச்சு முன்னெடுக்கும் அதிகாரம் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு கிடையாது. பதவிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளையே அனைவரும் செயற்படுத்துகின்றார்.

முஸ்லிம் அமைச்சர்கள் கூட்டாக பதவி விலகியமை பயனற்றது. அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து இவர்கள் கூட்டாக பதவி விலகி ஒரு மாத காலத்துக்குள் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க வேண்டும் என்று அரசுக்கு காலக் கெடு வழங்கினார்கள். மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாடுகளையே பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் ஏற்படுத்தினார்கள். இதனை இவர்களே திருத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (எ-61)

## கல்முனை...

அறிவித்தல் மூலம் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை விரைவில் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவோம். இதற்கான எல்லைநிர்ணயப் பணிகள் உடன் ஆரம்பமாகும்.' இவ்வாறு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று உறுதியளித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

கல்முனை விவகாரம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாடாளுமன்றத்திலுள்ள தலைமை அமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் பிரதமருடன் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் கலந்துகொண்டார். அதே வேளை, கல்முனை வடக்குப் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஞா.சிறிநேசன் ஆகியோர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த சந்திப்பின்போது கல்முனை உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்கு தலைமை அமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்தார். எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கத் தான் நடவடிக்கை எடுப்பேன் என்றும் அவர் உறுதியளித்திருந்தார்.

ஆனால், கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ள நிலையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் அதனைச் செய்ய முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது தலைமை அமைச்சரிடம் எடுத்துரைத்திருந்தார்.

இது தொடர்பில் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தனவுடன் தான் பேச்சு நடத்திவிட்டு நேற்றுப் பதிலளிப்பதாக மாவை எம்.பியிடம் தலைமை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதற்கிணங்க நேற்றுமுன்தினம் இரவே அமைச்சர் வஜிர அபேவர்தனவுடன் பேச்சு நடத்திய தலைமை அமைச்சர், நேற்றுப் பிற்பகல் அவரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மற்றும் கல்முனை வடக்குப் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரையும் நாடாளுமன்றத்திலுள்ள தனது அலுவலகத்துக்கு அழைத்துக் கலந்துரையாடினார்.

'இந்தக் கலந்துரையாடலின்போது கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமும் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதால், மீண்டுமொரு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கத் தேவையில்லை. எனவே, வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை விரைவில் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவோம் இன்று (நேற்று) தலைமை அமைச்சர் எம்மிடம் தெரிவித்தார்' என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கல்முனை உப பிரதேச செயலகத்தை விரைவில் பிரதேச செயலகமாக்குவதற்கான எல்லைகளைப் பிரிக்கும் பணிகளை, எல்லை நிர்ணய ஆணைக்குழு உடன் ஆரம்பிக்கும் எனவும் தலைமை அமைச்சர் எம்மிடம் கூறினார். அதேவேளை, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிதிகளைக் கையாள அம்பாறை மாவட்ட அரச செயலகத்திலிருந்து கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், அவர் தற்போதைக்கு அம்பாறை மாவட்ட அரச செயலகத்திலிருந்து தனது பணிகளை மேற்கொள்வார் எனவும் தலைமை அமைச்சர் எம்மிடம் தெரிவித்தார்.

தலைமை அமைச்சரின் இந்த உறுதிமொழிகளினால் இன்றைய (நேற்றைய) பேச்சு சுமுகமாக நிறைவடைந்தது. பேச்சில் பேசப்பட்ட விடயங்களை, கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமும் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துமாறு கோரி உணவொறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களிடம் தெரிவிக்குமாறும் தலைமை அமைச்சர் எம்மிடம் தெரிவித்தார்' -என்றார். (ம-22)

## கிழக்கு...

டங்களும், பேரணிகளும் இடம்பெற்றன.

ஏராளமானோர் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம், ஊர்வலத்தில் ஈடுபட்டனர். தரமுயர்த்தக்கோரி 4ஆவது நாளாகவும் நேற்று உணவு உறுப்புப் போராட்டம் தொடர்ந்தது. உணவு ஒறுப்புப் போராட்ட இடத்தில் ஆயிரக் கணக்கானோர் நேற்று ஒன்றுகூடி போராட்டத்துக்கு பேராதரவை வெளிப்படுத்தினர். சிங்கள மக்களும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

கிழக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் சகல பகுதிகளிலும் கடையடைப்பு இடம்பெற்றது. வீதிகள் வெறிச்சோடின. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் அதற்கு பேராதரவு வழங்கியிருந்தன. அரச, தனியார் போக்குவரத்துத் துறையினரும் ஆதரவு வழங்கினர்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு வலியுறுத்தி நேற்றுக்காலை 8 மணியளவில் சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்துக்கு அருகிலிருந்து கல்முனை உணவொறுப்புப் போராட்டம் நடைபெறும் இடத்துக்குப் பேரணியாகச் சென்று, உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மதகுருமார், சக போராட்டக்காரர்களுக்கு தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் குறித்த போராட்டத்தில் மக்கள் நேற்று ஈடுபட்டனர். (ம-த)

## தமிழர்களுக்கு...

அத்துரலிய ரத்தன தேரர்.

அம்பாறை, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறுக் கோரி மத குருமார்கள் கடந்த திங்கட்கிழமை முதல் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கல்முனை சுபத்திராராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கையின் இந்துகுருமார் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ.க.கு.சச்சிதானந்த சிவம் குருக்கள், கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரெட்ணம், சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்டோர் குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு நேற்றைய தினம் சென்ற அவர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உருவாக்க வேண்டும். உங்களுக்குத் தேவையான முக்கியமான அதிகாரங்களான காணி அதிகாரங்கள், நிதி அதிகாரங்கள் என்பன உங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. எனவே அது தொடர்பாகத்தான் இன்று நீங்கள் உணவு ஒறுப்பில் இருக்கின்றீர்கள். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற பிரதேசத்திலே அவர்களுக்கு அதிகாரத்தை வழங்காமல் அதனைத் தடுத்து வைத்துக் கொண்டு செயற்பட்டு கொண்டிருக்கிறார்கள். கல்முனையில் உள்ள முஸ்லிம் அரசியல் வாதிகளே இந்தச் சதிச்செயலைச் செய்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கல்முனை...

மாலை நடத்திய சந்திப்பின்போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

கல்முனை விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்திலுள்ள தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் இதில் கலந்துகொண்டார். இதன்போது, கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை விரைவில் முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படும் என தலைமை அமைச்சர் உறுதியளித்தார்.

அதன்பின்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் தலைமை அமைச்சர் பேச்சு நடத்தினார். இதில் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையான நிர்வாக அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக இயங்க வைக்க மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீம் இணக்கம் தெரிவித்தார்.

இதற்கான முதற்கட்ட அறிவிப்பை உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு வெளியிடவுள்ளது. விரைவில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் முழுமையான தனியான பிரதேச செயலகமாக இயங்க ஆரம்பிக்கும். அதற்கான வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்படும். (ம-22)

## இனப்படுகொலை...

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றின் ஏக விருப்பத்தைப் பெறும்நோக்கில் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் கொண்டுவரப்பட்டு தோல்வியடைந்த இந்தத் தீர்மான வரைவு நான்காவது முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை எடுக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் பெரும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

என.டி.பி. (புதிய ஜனநாயகக் கட்சி) நாடாளுமன்ற உறுப்பினர் செரி ஹாட்ஹஸ்ரில் இந்தத் தீர்மான வரைவைக் கொண்டு வந்தார். எதிர்கட்சித் தலைவர் அன்ரூ ஸ்காச்சர் உள்ளிட்ட பலரும் இந்தத் தீர்மான வரைபுக்கு ஆதரவு கொடுத்தனர். இறுதியாக மே மாதம் 25ஆம் திகதி லிபரல் கட்சியின் நாடானுமன்ற உறுப்பினர் ஷோன் ஷின் இந்த வரைவை நாடாளுமன்றில் கொண்டுவந்திருந்தார்.

இலங்கையில் இறுதிப்போரின் போது அரசதரப்பால் போர்க்குற்றம் நிகழ்த்தப்பட்டது என்று தமிழர்களும், போர்க் குற்றம் இடம்பெறவில்லை என்று அரசும் கூறிவரும் நிலையில் வல்லமை பொருந்திய ஐரோப்பிய நாடொன்று இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் போர்க்குற்றம் நிகழ்த்தப்பட்டதா என்று விசாரணை செய்யுமாறு ஐ.நா. சபையைக் கேட்டிருப்பதானது பன்னாட்டு அரங்கைப் பரபரப்பாகியுள்ளது. இது பன்னாட்டு அரசியல் அரங்கில் திருப்பத்தை ஏற்படுத்த வல்ல நகர்வு என்று வல்லுநர்கள் கருதுகின்றனர். (ம)

## தமிழர்களின்...

தெரிவித்தார்.

அம்பாறை, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறுக் கோரி மத குருமார்கள் கடந்த திங்கட்கிழமை முதல் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கையின் இந்துகுருமார் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ.க.கு.சச்சிதானந்த சிவம் குருக்கள், கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரெட்ணம், சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்டோர் குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு நேற்றையதினம் சென்ற அவர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாளை நண்பகல் 12 மணிக்கு முன்னர் கல்முனை தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். நியாயமான கோரிக்கைக்காக உணவு ஒறுப்பில் ஈடுபடும் எமது மதகுருமார், இளைஞர்கள் நீதியின் பக்கம் நிற்கின்றனர். போராட்டம் நேர்மையானது. அடிப்படைவாதிகள் தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்காதிருப்பதை எண்ணி நான் மிகவும் துக்ககரமாக இருக்கின்றேன்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## தொண்டர்...

கடந்த மாதம் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆயிரத்து 302 தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது. இதில் தகுதிபெற்றவர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி திருகோணமலையில் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் பங்குபற்றுதலோடு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இதில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 378 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. (ம-7)

## ஆளுநரின்...

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாண ஆளுநரை சந்தித்துப் பேச்சு நடத்தும் நிலையில் தாம் இல்லை என ஆவா குழுவின் பெயரில் கடிதம் ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கடந்த வாரம் ஆவா குழுவை சந்தித்து பேச்சு நடத்த தயார் எனவும், அதற்காக தான் எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி அவர்கள் கூறும் இடத்துக்குச் சென்று பேச்சு நடத்தத் தயார் எனவும் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஆவா குழுவின் பெயரில், வடமாகாண ஆளுநருக்கு 17ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அதில் இன்றைய சூழ்நிலையில் எங்களை உங்கள் மத்தியில் அடையாளம் காட்டிக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## ஊழல்...

வன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அரச சேவையில் இலஞ்ச ஊழலை ஒழிக்கும் முகமாக இது தொடர்பான விழிப்புணர்வை அரச அதிகாரிகள், ஊழியர்களுக்கு ஏற்படுத்தும் ஆளுநரின் எண்ணக்கருவுக்கு அமைவாக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துக்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வித்துறையின் அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலஞ்ச ஊழலற்ற முன்மாதிரியான மாகாணமாக வடமாகணத்தை மாற்றுவதற்கு அரச அதிகாரிகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வடமாகாணத்தின் கல்வித்துறை அதிகாரிகளுக்கு முதலில் இந்த இலஞ்ச ஊழலை ஒழிப்பது தொடர்பான செயற்திட்டம் இடம்பெறுவதுடன் வடமாகாணத்தினது ஏனைய துறைகளின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும் நடைபெறும். இலஞ்ச ஊழல் புரியும் அனைத்து உயர் அதிகாரிகளும் தண்டிக்கப்படுவார்கள் - என்றார். (ம-7)

## போராட்டத்துக்கு...

வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் பொது அமைப்புகளும் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளன. வவுனியா கந்தசாமி கோவிலில் காலை 7.30 மணிக்கு 108 தேங்காய்கள் உடைக்கப்படவுள்ளன. ஆதரவாளர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (து-21)

## தரமுயர்த்த...

கள் மற்றும் மௌலவிகள் சிலர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை பழைய பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.ரஹ்கீப், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் போன்றோரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (து-30)



## நகருக்குள் புகுந்தது பனிக் கரடி பருவ நிலை மாற்றமே காரணம்

*ரஷ்யாவில் நெகிழ்ச்சிச் சம்பவம்*

மொஸ்கோ, ஜூன் 21

உணவு தேடி அலைந்தவாறு துருவக் கரடி ஒன்று ரஷ்யாவில் நகர்ப் பகுதியில் சுற்றித் திரிந்தது. இது அந்தப் பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ரஷ்யா நாட்டின் செர்பியாவின் நோரில்ஸ் நகருக்குள் நுழைந்த துருவக்கரடியே அந்த நகர் முழுதும் உணவுக்காகச் சுற்றித் திரிந்தது.

பனி நிறைந்த கடற்கரை, ஆறு, துருவப் பகுதிகளில் காணப்படும் இந்தவகைப் பனிக்கரடி கடந்த சில நாள்களாக தொழிற்சாலைகள் நிறைந்த அங்குள்ள நகரப்பகுதியில் சுற்றி திரிந்ததை அந்தப் பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் நோக்கினர்.

ஆர்ட்டிக் துருவப் பகுதியில் ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றம் காரணமாக போதிய உணவு கிடைக்காமல் இந்தக் கரடி உணவு தேடி இடம் பெயர்ந்து நகருக்குள் வந்திருக்கலாம் அல்லது வழிதவறி நகருக்குள் நுழைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக வெப்பமயமாதல் காரணமாகப் பனிப்பிரதேசங்கள் அனைத்தும் வேகமாக உருகி வருகின்றன. இதனால் பனிப் பிரதேசங்களில் வாழும் பல்வேறு உயிரினங்கள் அழியும் தறுவாயில் உள்ளன. சில உயிரினங்கள் மாற்று வாழ்விடம் மற்றும் உணவு தேடி மனிதர்கள் வாழும் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றன என்றும் குறிப்பிடுகிறார்கள்.

ஜமால் கொலை விவகாரம்

# சவூதி இளவரசர் சல்மான் விசாரிக்கப்பட வேண்டும்

*ஐ.நா. அதிகாரி அக்னஸ் கல்மார்ட் தெரிவிப்பு*



*ஜெனீவா, ஜூன் 21*

*பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜியின் கொலை தொடர்பாக ஆராய்ந்த, நீதிக்குப் புறம்பான கொலைகள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரியான அக்னஸ்கலமார்ட் தனது அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டார். அத்தோடு இது ஒரு திட்டமிட்ட மிலேச்சத்தன மான கொலை என்று ஜமாலின் கொலை குறித்து அவர் குறிப்பிட்டார்.*

துருக்கியில் கிடைத்த ஆதாரங்களின் படி, சவூதியின் முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மானே இந்தக் கொலையின் சூத்திரதாரி என்றும் அக்னஸ் கலமார்ட் கூறினார். இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சவூதி கைதுசெய்து, விசாரித்துத் தண்டனை விதித்துள்ள 11 பேரும் கொலையாளிகள் இல்லை என்றார்.

சவூதிஇளவரசர்சல்மானும், அவருக்கு உதவியஅரசஅதிகாரிகளும்ஜமாலின் கொலை தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டும் எனவும் அக்னஸ் மேலும் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள சவூதியின் அயலுறவு அமைச்சர் அடல் அல் ஜூபேயர் தனது கீச்சகப் பக்கத்தில் 'அக்னஸ்சின் அறிக்கைஎந்தஅடிப்படைஉண்மைகளும் இல்லாதது, ஒன்றுடன் ஒன்று முரண்பாடாக உள்ளது. அதைச் சவூதி நிராகரிக்கிறது' எனப் பதிவிட்டார்.

**பின்னணி**

சவுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஜமால்கஷேக்ஜி. சவூதிஅரசகுடும்பத்துடன் நெருக்கமாக இருந்தவர். பின்னர் கருத்து வேறுபாடு காரணமாகச் சவூதியைவிட்டு அமெரிக்கா சென்று ஊடகவியளாலராகப் பணிபுரிந்தார். சவூதி அரசைக் குறிப்பாக இளவரசர் சல்மானைக் கடுமையாக விமர்சித்தார்.

இந்தநிலையில்சிலஆவணங்களைப் பெறுவதற்காக ஜமால், துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவூதியின் தூதரகத்துக்குச் சென்றார். சென்றவர் அந்தத் தூதரகத்தில் இருந்து வெளியே வரவில்லை. அவர் அங்கு கொலை செய்யப்பட்டமை சில நாள்களுக்குப் பின்னர் தெரியவந்தது.

ஆரம்பத்தில் இதை மறைத்து, இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனக் கூறியது சவூதி. இந்தக் கொலை சவூதி உளவுத் துறை அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளால் பல நாள்களுக்கு முன்னதாவே திட்டமிடப்பட்ட ஒன்று என்று துருக்கி அதிபர்தெரிவித்தார். இந்தவிவகாரத்தில் சவூதி நடந்துகொண்ட விதம் மிகமோசமானமூடிமறைப்பாகஇருந்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

ஜமாலின் சாவுக்குக் காரணமான குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்கவுள்ளதாகச் சவூதி இளவரசர் கூறினார். முதல் கட்டமாக 11 பேரின் மேல் குற்றம்சாட்டியது. தாங்கள்சவூதிஇளவரசரின்ஆணைப்படிசெயற்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் இவர்களைக் கைது செய்தமை, விசாரித்தமை, தண்டனை வழங்கியமை எதுவுமே மூடி மறைக்கப்பட்டுநடந்தசவூதியின்நம்பிக்கையீனமான செயல் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

## வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது சந்தேகத்தில் நால்வர் மீது வழக்கு

கோலாலம்பூர், ஜூன் 21

2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் விழுந்து நொருங்கியிருந்ததுமலேசியவானூர்தி ஒன்று.

இதனால் அந்த வானூர்தியில் பயணித்த 298பேரும் சாவடைந்திருந்தனர். அந்த வானூர்தி சுடப்பட்டதாலேயே வீழ்ந்து நொருங்கியது என்று தெரிவித்துத்தற்போதுநான்குபேர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வானூர்தியில் பயணித்த 298பேரைக் கொலை செய்தவழக்கில்நால்வர்கைதுசெய்யப்பட்டனர். இகோர் கிர்கின், செர்கெய் டுபின்ஸ்கி, ஒலெக் புல்டோவ் ஆகிய ரஷ்யாவைச்சேர்ந்தமூவரும்உக்ரைனைச் சேர்ந்த லியோனிட் கார்சென்கோ என எல்லாமாக நால்வர் இந்தவழக்கில்கைதுசெய்யப்பட்டனர். ஏவுகணையைப்பயன்படுத்திக்குறித்த வானூர்தியைச் சுட்டு வீழ்த்தி, பயணிகள்மற்றும்வானூர்திஊழியர்களைக் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.



**பின்னணி**

2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதியன்று நெதர்லாந்தின் ஆம்ஸ்டார்டாம்நகரில்உள்ளஷிபோல் வானூர்தி நிலையத்தில் இருந்து புறப்பட்ட 'எம்.ஹெச்17' ரகவானூர்திஅடுத்த நாள்மலேசியாவின்தலைநகர்கோலாலம்பூரை அடைய இருந்தது. புறப்பட்ட சில மணி நேரங்களில் ரஷ்ய - உக்ரைன் எல்லையில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வான்வெளியில் பறந்து கொண்டிருந்தபோது அந்த வானூர்தி தனது தொடர்பை இழந்தது. உக்ரைன் அரசு மற்றும் ரஷ்ய ஆதரவு பெற்ற உக்ரைன் பிரிவினைவாதக் குழுக்கள் இடையே மோதல் நிலவி வந்த காலப்பகுதி. அப்போது உக்ரைன்இராணுவவானூர்திகள் பலவும் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன. ரஷ்ய ஆதரவுப் பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் வான் தாக்குதல்கள் இடம்பெற்றன. அந்தக்காலப்பகுதியில் விழுந்திருந்தது குறித்த வானூர்தி. தற்போது அது விபத்தால் விழவில்லை. சுட்டு விழுத்தப்பட்டிருக்கிறது என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. சில ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## மாலியில் தாக்குதல் 41 பேர் சாவு

பமாகோ, ஜூன் 21

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியின் மத்திய பகுதியில்உள்ளகங்காபானிமற்றும்யோரோஆகிய 2 கிராமங்களுக்குள் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு ஆயுதம் ஏந்திய குழுக்கள் புகுந்து தாக்குதல் நடத்தின. துப்பாக்கி மற்றும்கூரியஆயுதங்களைஏந்திய100க்கும்மேற்பட்டோர் இந்தத் தாக்குதல்களை நடத்தினர்.

வீடுகளுக்குள் இருந்தவர்களை வெளியே இழுத்து வந்து, கொடூரமாகக்கொலைசெய்தனர். பலவீடுகளைத்தீவைத்து எரித்தனர். பின்னர் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை திருடிக்கொண்டு அங்கிருந்து சென்றனர். இந்தத் தாக்குதல்களில் 41பேர் சாவடைந்தனர். இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால், இது பயங்கரவாதிகளின் சதிச்செயல் என அந்த நாட்டு அரசு தெரிவித்தது.

**பின்னணி**

மேற்குஆபிரிக்கநாடுகளில்ஒன்றானமாலியில்வேட்டைக்காரர்களான டோகோன் இனத்தவர்களுக்கும், மேய்ச்சல் இன நாடோடிகளான புலானி இனத்தவர்களுக்கும் இடையேஅடிக்கடிமோதல்கள்நடக்கின்றன. அண்மையில் மாலியின் மத்திய பகுதியில், டோகான் இனத்தவர்கள் அதிகம்வாழும்சோபனேகோவ்கிராமத்துக்குள்ஆயுதம்ஏந்திய குழுக்கள் புகுந்து நடத்திய தாக்குதலில் 100 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது. இதனால்இது இவ்விரு இனக்குழுமங்களுக்கிடையேயான மோதல் என்றும் கருதப்படுகிறது.




## ஜப்பானில் நிலநடுக்கம் 26 பேருக்குக் காயம்

டோக்கியோ, ஜூன் 21

ஜப்பானில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 6.7 ரிக்டராகப் பதிவாகியது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலிருந்து சுமார் 300 கிலோ மீற்றர் தொலைவில்இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்களில் சில பாதிப்புக்குள்ளாகின. 26 பேர் காயமடைந்தனர். இந்த நில நடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் சுனாமி எச்சரிக்கை விலக்கப்பட்டது. நிலநடுக்கம் காரணமாக ஜப்பான் கடலோரப் பகுதிகளைச் சுனாமி தாக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால், சுனாமி அலைகள் எழுவதற்கு வாய்ப்பில்லை என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.





இந்தியாவின் கங்கை நதிக்கரையை ஒட்டிய பகுதி ஒன்றில், பன்னாட்டு யோகா தினத்தை முன்னிட்டு இந்துப் புனித மனிதர் என்று சிறப்பிக்கப்படும் முதிய துறவி ஒருவர் மரத்தில் தனது உடலை வளைத்துத் தொங்கியவாறு யோகா செய்கிறார்.

## ஆந்திராவிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு திருப்பதி தேவஸ்தானம் வேண்டுகோள்

திருமலை,ஜூன் 21

இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் ஆந்திராவிலும் தண்ணீர்ப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. அங்குள்ள திருப்பதிக் கோவிலிலும் குடிதண்ணீர்த்தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலையில், பக்தர்களும், உள்ளூர் மக்களும், வியாபாரிகளும், தேவஸ்தானத்துக்கு ஒத்துழைக்க வேண்டும், அனைவரும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனத் திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

திருப்பதிக் கோவிலில் மாத்திரமன்றி திருப்பதி மாநகராட்சி முழுதுமே கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## மருத்துவமனைகள், பாடசாலைகள் தாக்கப்படுகின்றன

### சிரியா குறித்து ஐ.நா. விசனம்

சிரியாவில் நடந்து வரும் போரில் அரச படைகளும் ரஷ்யப் படைகளும் வேண்டுமென்றே பொதுமக்களையும், மருத்துவமனைகளையும், பள்ளிக்கூடங்களையும் குறிவைத்துத் தாக்குவதாக ஐக்கிய நாடுகள் சபை விசனம் வெளியிட்டது.


கடந்த ஏப்ரல்மாதத்திலிருந்துசுமார் 26மருத்துவசுகாதாரநிலையங்கள் இட்லிப் மாகாணத்தில் தாக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா.மேலும் தெரிவித்தது.

இதேபோன்றகுற்றச்சாட்டைஐக்கிய நாடுகள்சபைபலமுறைமுன்வைத்துள்ளது. ஆனால், வழக்கம்போல் ஐக்கிய நாடுகளின் இந்தக் குற்றச்சாட்டை சிரியாவும், ரஷ்யாவும் மறுத்துள்ளன.

## எகிப்திய முன்னாள் அதிபரின் சாவு குறித்து விசாரணை தேவை – அறிவித்தது ஐ.நா.

கெய்ரோ.ஜூன் 21

எகிப்தின்முன்னாள்அதிபரானமுகமது மோர்சிநீதிமன்றத்தில்மயங்கிவிழுந்து சாவடைந்திருந்தார். அவரது சாவு குறித்துவெளிப்படையானவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. முகம்மது மோர்சியின் சாவு திட்டமிட்ட கொலை என்றுமுஸ்லிம்சகோதரத்துவஅமைப்பினர் குற்றம் சாட்டி வரும் நிலையில் இது தொடர்பாக வெளிப்படையான விசாரணைதேவைஎன்றுஐக்கியநாடுகள்சபைதெரிவித்தது. முகமதுமோர்சியின் சாவு குறித்தும் சிறையில் இருந்த 6 ஆண்டுகளில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் விசாரணை தேவை என்று ஐ.நா. மனித உரிமைகள்சபைதெரிவித்தது.



### பின்னணி

எகிப்தில்நீண்டகாலம்அதிபராகஇருந்த சர்வாதிகாரிஹோஸ்னிமுபாரக், ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2012ஆம் ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றுமுஸ்லிம்சகோதரத்துவ அமைப்பைச்சேர்ந்தமுகம்மதுமோர்சி அதிபரானார். அதிபர் பதவியில் ஓராண்டு மட்டுமே இருந்த முகமது மோர்சிக்குஎதிராகப்போராட்டம்வெடித்தது. சகோதரத்துவ அமைப்பினரும், எதிர்க்கட்சியினரும், மக்களும்போராட்டம் நடத்தினார்கள். இதை அடக்க உத்தரவிட்ட அதிபர் மோர்சி, போராட்டம் நடத்துபவர்களைக்கொல்லஉத்தரவிட்டதாகக்கூறப்பட்டது. இதனால், அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் அப்தல்பதாஅல்சிசிதலைமையிலான இராணுவம், மோர்சியைப் பதவி நீக்கம் செய்து கைது செய்து சிறையில் அடைத்தது.

போராட்டத்தில் ஈடுபட்டோரைக் கொல்வதற்கு உத்தரவிட்டதாக முகமது மோர்சி மீது வழ்க்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை ஒன்றுக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகிப் பேசிக்கொண்டிருந்தமோர்சிமயங்கிவிழுந்து சாவடைந்தார்.

## இன்றைய நாள்

**மேடம்:** உறவினர்களிடம் அதிக அன்பு, பாசம் கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்க தேவையான அளவில் மாற்றங்கள் செய்து பணியாற்றுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் செயல்படுவதால், பல நன்மைகள் கிடைக்கும். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவில் தாமதம் உண்டு.

**மிதுனம்:** சிலர் உங்களை புகழ்ந்து பேசி, தங்களது சொந்த காரியத்தை நிறைவேற்றுவர். தொழில், வியாபாரம் அதிக உழைப்பால் வளர்ச்சி பெறும்.

**கடகம்:** உங்கள் மனம், செயலில் புத்துணர்வு பிறக்கும். தொழில், வியாபார நடைமுறை திருப்திகரமாக இருக்கும். ஆதாய பண வரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**சிம்மம்:**குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். மாணவர்கள், பொறுப்புணர்வுடன் படித்து பாராட்டு பெறுவர்.

**கன்னி:** சமூக நிகழ்வு மனதை பாதிக்கலாம். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் குளறுபடியை தாமதமின்றி சரி செய்யவும். அளவான பணவரவு கிடைக்கும். தியானம், தெய்வ வழிபாடு மனதில் நம்பிக்கையை தரும்.

**துலாம்:** உங்கள் நண்பருக்காக பரிந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பணவரவுக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள். திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்:** பணிகளை சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான அனுகூல காரணிபலம்பெறும். ஆதாயவருமானம் உண்டு.

**தனுசு:** சிலர் உங்களுக்கு உதவுவது போல பாசாங்கு செய்வர். உங்களது முயற்சியால் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி சுமாரான அளவில் இருக்கும்.

**மகரம்:** உங்கள் செயல் திறன் கண்டு புதியவர் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** அவசர பணி ஏற்படும். நல்லோரின் ஆலோசனை, நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தின் வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**மீனம்:** உங்கள் ஞாபக சக்தி சிறப்பாக இருக்கும். வாழ்வில் குறுக்கிடும் சிரமங்களை வெல்லும் திறனைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி இனிதாக நிறைவேறும்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான ஏவ்.எ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் விளை பூமி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந் தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலி போயிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம் பெறும்ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெக மீட்பர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (எ-23)

+++++

யாழ்ப்பாணம், ஜூன் 21
மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில்

உடுத்துறை பாரதி விளையாாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூநகரி செந்தாரகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மதியம் 2.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில் கிளிநொச்சி ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது .மாலை 4. மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நாச்சிக்குடா சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாணம் கால்பந்தாடட்ட லீக்கில் அங்கம் வைகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் ஏவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்களில் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக்கழக அணி, ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணி என்பன வெற்றி பெற்றன.

புதன்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 3 .30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் 3:1 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக் னேஸ்வரரா விளையாட்டுக் கழக அணி மோதியது. 1: 0 என்ற கோல் கணக்கில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)





# தெல்லிப்பழை மகாஜன மகளிர் கால்பந்தில் வாகைசூடி சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 21
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 20 வயதுப் பிரிவு மகளிர் அணி 2019 ஆம் ஆண்டு கால்பந்தாட்ட தொடரை வெற்றி கொண்டதன் மூலம் தொடர்த்து ஆறு ஆண்டுகள் மாகாண மட்டச் சம்பியனாக தெரிவாகி வரலாற்று சா்தனனயை நிலை நாட்டியது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையே 20 வயது பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன் கிழமை அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

அதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரரேதாய மகா வித்தியாலய அணி மோதியது.

ஆட்டத்தில் 6 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சார்பில் கிருசாந்தினி, கௌரி, இருவரும் தலா 2 கோல்களையும், சானு, தர்மிகா இருவரும் தலா ஒரு கோலையும் பதிவு செய்தனர்.

சிறந்த வீராங்கனையாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீரா்ங்கனை தாமிகா தெரிவானார். (எ-23)





# கால்பந்தாட்டத் தொடரில் வென்றது பற்றிக்ஸ் அணி

யாழ்ப்பாணம், ஜூன் 21
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயது பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் சென்.சேவியர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. அதில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. (எ)

# நெல்லியடி மத்திய கல்லூரி அணி கால்பந்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 21
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இர்ண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்த்து. அதையடுத்துச் சமநிலை தகர்ப்பு உதையில் மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. அதில் 3:1 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

ஆட்ட நாயகனாக நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் றொபின்சன் தெரிவானர். (எ-23)




# 16 வயதுப் பிரிவில் பற்றிக்ஸ் கால்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 21
வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயது பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி மோதியது.

அதில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6:1 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது. (எ-23)

கோபா அமெரிக்கா கால்பந்து தொடர்;

# பொலிவியாவை வீழ்த்தி பெரு அணி வாகை




கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் பிரேசில் நாட்டில் இடம்பெற்று வருகின்றது. 12 அணிகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பெரு-பொலிவியா அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பொலிவியா அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த அணி வீரர் மார்டீன் மொரினோ அதனை கோலாக மாற்றினார். அதன்பின் பெரு வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். பெரு அணிவீரர் குயெர்ரே ரோ 45 ஆவது நிமித்தில் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற நிலையில் சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 5ஆவது நிமிடத்தில் பெரு அணி வீரர் பர்பென் ஒரு கோலைப் போட்டார். அதன் பின்னர் ஆட்டம் இன்னும் விறுவிறுப்பானது. ஆட்டத்தின் இறுதி நேரமான 90ஆவது நிமிடத்தில் மீண்டும் பெரு அணி வீரர் எடிசன் புளோரஸ் ஒரு கோலைப் போட இறுதியில் பெரு அணி 3:1 என்ற கணக்கில் பொலிவியாவை வீழ்த்தி வெற்றி பெற்றது.




## பாகிஸ்தான் அணியை தடை செய்ய வழக்கு

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுடான போட்டியில் பாகிஸ்தான் அணி 89 ஓட்டத்தால் தோல்வியடைந்தது. இதனால் பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பிராஸ் அஹமட் மீதும் அணியினர் மீதும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன.

இந்த நிலையில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தின் குஜ்ரன்வாலா பகுதியில் உள்ள கிரிக்கெட் ரசிகர் ஒருவர் சர்பிராஸ் அகஹமட் தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கு தடை விதிக்க வேண்டும் என்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன் இன்சமாம் உல் ஹாக் தலைமையிலான தேர்வுக் குழுவைக் கலைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதை விசாரித்த நீதிபதி, மனு தொடர்பாக விரிவான பதில் வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

## சர்பிராஸை விமர்சித்த அக்தர்

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி இலகு வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணிக்கு பல்வேறு தரப்பினர்களிடம் இருந்தும் கண்டனங்கள் குவிந்த வண்ணம் உள்ளன. அணித் தலைவர் சர்பிராஸ் களத்தடுப்பின் போது கொட்டாவி விட்டபடி களத்தடுத்தில் சலிப்புடன் இருந்தார். இதனை சமூக வலைத்தளங்களில் நெட்டிசன்கள் கண்டித்து வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் முன்னாள் அணித் தலைவர் இம்ரான் கான் சில அறிவுரைகளை அணிக்கு வழங்கியிருந்தார். எனினும் அதனை அணித் தலைவர் கருத்தில் எடுக்கவில்லை. இதனைத் தொடர்ந்து முன்னாள் பாகிஸ்தான் வீரர் அக்தரும் சர்பிராஸை கடுமையாக விமர்சித்துள்ளார்.

முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் பாகிஸ்தான் மிகப்பெரிய தவறு செய்தது. பாகிஸ்தான் 260,280 ஓட்டங்கள் எடுத்திருந்தாலும், பந்து வீச்சின் மூலம் இந்தியாவை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

சர்பிராஸ் அகமது எப்படி மூளையில்லாதவர் போன்று செயற்பட்டார் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. பாகிஸ்தான் அணியால் சிறப்பாக சேஸிங் செய்ய முடியாது என்பதை அவர் எப்படி மறந்தார்? நம்முடைய பலமே பந்து வீச்சுதான் என்பது தெரியும். சர்பிராஸ் அகமது நாணயச் சுழற்சியில் வென்றபோதே பாகிஸ்தான் பாதியளவு வெற்றி பெற்றது. ஆனால், இந்தப் போட்டியின் தோல்விக்கு அவரே காரணமானார்.

இந்தப் போட்டி 2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியின் கண்ணாடிப்படம் போன்றது. அன்றைய தினம் இந்தியா செய்த அனைத்து தவறுகளையும் பாகிஸ்தான் செய்தது- என்றார்.


## ஸ்பெயின் கால்பந்து பயிற்சியாளர் பதவி விலகல்

பார்சிலோனா அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளரான லூயிஸ் என்ரிக் ஸ்பெயின் கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளர் பதவி விலகியுள்ளார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரபல கால்பந்து பயிற்சியாளர் லூயிஸ் என்ரிக். இவர் ரோமா, செல்டா, பார்சிலோனா போன்ற தலைசிறந்த கால்பந்து கழக அணிகளுக்கு தலைமை பயிற்சியாளராக இருந்துள்ளார்.

2014ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை பார்சிலோனா அணியில் தலைமை பயிற்சியாளராக இருந்தார். அதன்பின் கடந்த ஆண்டு ஸ்பெயின் பன்னாட்டு கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக பதவி ஏற்றார். தற்போது ஸ்பெயின் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார். தனது சொந்த காரணத்துக்காக பதவி விலகினேன் என்று அவர் தெரிவித்தார்.

இவர் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து ஸ்பெயின் அணியின் பயிற்சியாளர் பணியில் இருந்து ஒதுங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது துணைப் பயிற்சியாளராக இருக்கும் மொரேனோ தலைமை பயிற்சியாளராக செயற்பட்டு வருகின்றார்.



# போராடித் தோற்ற வங்கப் புலிகள்



பங்களாதேஷின் துடுப்பாட்டத்தைப் பார்த்து ஆஸ்திரேலியா அணி சில நிமிடங்கள் பயம் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆரம்ப இணை கைகொடுத்திருந்தால் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருக்கும். எனினும் அவர்கள் இறுதி வரை போராடியிருந்தனர்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் பங்களாதேஷ் அணி 48 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அணியின் ஆரம்பம் ஆஸிக்கு எப்பொழுதுமே பலமாகத்தான் காணப்படுகின்றது. ஆரம்ப இணை 100 ஓட்டங்களைத் தொட்டால் ஏனைய வீரர்கள் அழுத்தங்கள் இல்லாமல் துடுப்பெடுத்தாடுவார்கள். முதலாவது இலக்கு 121 ஓட்டங்கள் பெற்ற போது இழக்கப்பட்டது. மூன்றாவது இலக்குக்காக 192 ஓட்டங்கள் பகிரப்பட்டன. வோர்னர் சதம் கடந்து அசத்தினார். அவர் 166 ஓட்டங்களை பெற்றார். அவருக்கு இணையாக கவாயா அதிரடி காட்டியிருந்தார். இறுதி 6 பந்துப்பரிமாற்றங்களிலேயே ஆஸியின் ஏனைய 3 இலக்குகள் சரிக்கப்பட்டன. அதுவரை அதிரடியாகத்தான் காணப்பட்டது. அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 381 ஓட்டங்களைக் குவித்தது. பந்து வீச்சில் சர்கார் இறுதியில் சிறப்பாக பந்து வீசி 3 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணியினர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். எனினும் தேவையற்ற ஓட்டத்தை ஓட்டமுற்பட்டு ரன் அவுட் முறையில் முதலாவது இலக்கை பறி கொடுத்தது. இணைந்தார் சகிப் அல் ஹசன். இவர் கடந்த போட்டியில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக சதம் கடந்து அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் நேற்றைய போட்டியில் அவர் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். ஆனால் அவரின் இடத்தை ரஹீம் நிரப்பியிருந்தார். அவர் சதம் கடந்து பொறுப்புடன் ஆடியிருந்தார். பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறிது விளையாடிக் கொடுத்திருந்தால் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருக்க வாய்பிருந்திருக்கும். அத்தோடு ஆஸி அணிக்கு அவர்கள் ஓட்டங்களையும் வாரி வழங்கி விட்டார்கள் 350 ஓட்டங்களுக்குள் ஆஸ்திரேலியாவைக் கட்டுப்படுத்தியிருந்தால் இலகுவாக வெற்றி பெற்றிருக்க முடியும். இருந்தும் பங்களாதேஷ் அணியைப் பாராட்டியே ஆக வேண்டும். இமாலய இலக்கை விரட்டுவதென்பது இலகுவான காரியமல்ல. அதுவும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அவர்களில் சிறந்த பந்து வீச்சாளர்களின் பந்துகளை எதிர் கொண்டு அந்த அணி நிர்யணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 333 ஓட்டங்களைப் பெற்று 48 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. ஆட்டநாயகனாக ஆஸ்திரேலியா அணியின் வீரர் வோர்னர் தெரிவு செய்யப்பட்டார்.

# அதிவேக 8 ஆயிரம் ஓட்டங்கள்; இரண்டாவது வீரரானார் அம்லா

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா அணி வீரர் அம்லா 24 ஓட்டங்களை எடுத்த போது ஒருநாள் போட்டியில் 8 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இவர் 176 இன்னிங்ஸில் இந்த ஓட்ட எண்ணிக்கையைத் தொட்டார். இதன் மூலம் அதிவேகத்தில் 8 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 2ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். முதலாவது வீரராக இந்திய அணி வீரர் கோக்லி காணப்படுகின்றார்.

8 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 4ஆவது தென்னாபிரிக்கா வீரர் என்ற பெருமையை அம்லா பெற்றார். கலிஸ், டிவில்லியர்ஸ், கிப்ஸ் ஆகியோருக்கு அடுத்தப்படியாக அவர் காணப்படுகின்றார்.

போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்
முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு : I சனி 9.00 மணி
பிரிவு : II ஞாயிறு 9.00 மணி
பிரிவு : III சனி, ஞாயிறு பி.ப 4.30
பிரிவு : IV செவ், வியா பி.ப 4.00
முகாமைத்துவ உதவியாளர் மட்டுப்படுத்தப்பட்டது
ஞாயிறு 9.00 மணி
சட்டமாணி NSB Bank
சனி, ஞாயிறு 9.00 மணி
பதிவாளர், புள்ளிவிபரயலாளர், ஆசிரியர் தெரிவு
பிரதி சனி 9.00 மணி
ஜெலர் II, புனர்வாழ்வு உத்தியோகத்தர்
சனி, ஞாயிறு 9.00 மணி
SLAS, SLEAS
பிரதி ஞாயிறு 9.00 - 4.00
076 688 3394,
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில பஸ்நிலையத்திலிருந்து 100 m தூரத்தில்)

அதிசய வைத்திய சேவை
ஹோமியோபதி வைத்திய சேவை ஊடாக IAS வைத்திய சேவை நிலையத்தில் நீரிழிவு (சலரோகம்), மூட்டு வாதம், ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாகக் குணப்படுத்திக் கொள்ள 37 வருட அனுபவம் வாய்ந்த வைத்திய சேவைகள் நாளை (22.06.2019) சனிக்கிழமை இல.125, பிரதான வீதி, 2 ஆம் குறுக்குத்தெரு சந்தி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும். எதிர்வரும் சனிக்கிழமை (29.06.2019) A9 வீதி, பரந்தன் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடைபெறும்.
பதிவுக்கும் முற்பதிவுக்கும்:- 077 444 1082

## 3 கோடியைத் தாண்டியது கோக்லியின் ருவிற்றர்

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோக்லியை ருவிற்றரில் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை 3 கோடியைத் தாண்டியுள்ளது.

கோலிக்யிடம் இருந்து தகவலை பெறுவதற்காக அவரது ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ருவிற்றர் பக்கத்தை பின்தொடர்கி றார்கள். அந்த வகையில் அவரை பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை தற்போது 3 கோடியை தாண்டியுள்ளது.

இதுகுறித்து தனது ருவிற்றர் பக்கத்தில் விராட் கோக்லி "ருவிற்றரில் 30 மில்லியனை கடக்கும் போது என்னுடையாரியாக்சன்... விரும்பும் மற்றும் ஆதரவாக இருக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றி'' என காணொலியுடன் பதிவிட்டுள்ளார்.



FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.06.19 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
P. உமாசங்கர் & வளவாளர்கள்
SLAS, SLFS, SLEAS, MA,
புள்ளி விபர அலுவலர், நீதிமன்ற பதிவாளர், சட்டக்கல்லூரி, பட்டதாரி ஆசிரியர்.
- பொது அறிவு
- இலங்கை மற்றும் உலகளாவிய போக்குகள்
- பல்தேர்வு, சுருக்க, கட்டமைப்பு, கட்டுரை வினா விடைகள்
S. அஜ்ரன் பெரேரா
23.06.2019 ஞாயிறு
மு.ப 9.00 - பி.ப 4.00
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
தொடர்ந்து பிரதி ஞாயிறு
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
078 166 1956, 077 741 7143, 077 394 8964, 071 813 0990

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 05 . 1959



மறைவு 02 . 07 . 2018

அமரர் கணேசன் இராஜபூபதி

ஆண்டொன்று கடந்தாலும் உங்கள்
அன்புக்காய் ஏங்கி வாடுகின்றோம் அம்மாவே!
உங்கள் நினைவுகள் என்றும்
வாழ்ந்துகொண்டிருக்கின்றது
எம் இதயங்களில் நிலையாக!
மீண்டும் ஒரு பிறப்பிருந்தால் உம் வயிற்றில்
பிறந்திட வேண்டுகின்றோம் இறைவனை!
ஆண்டொன்று கடந்தாலும் என்றும்
எம் இதயத்தில் வாழும் அம்மாவுக்கு எமது அஞ்சலிகள்

பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.



கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் கொலம்பியா- கட்டார் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியின் போது கொலம்பியா நாட்டு ரசிகர் ஒருவர் பெரு அணி வெற்றி பெற்றதும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய போது.

# விஜய் சங்கருக்கு பயிற்சியில் காயம்



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியில் இருந்து தவான், புவனேஸ்வர் குமார் காயம் காரணமாக விலகியுள்ள நிலையில் தற்போது விஜய் சங்கரும் காயம் அடைந்துள்ளார்.

இவர் பயிற்சி ஆட்டத்துக்கு தயாராகும்போது, கலீல் அகமது வீசிய பவுன்சர் பந்து விஜய் சங்கரின் முழங்கையை பலமாக தாக்கியது. அதிர்ஷ்டவசமாக முறிவு ஏதும் ஏற்படாததால், காயத்தில் இருந்து உடனடியாக மீண்டார். முதல் இரண்டு போட்டிகளில் இடம்பெறாத விஜய் சங்கர், பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் போட்டியில் நடுவில் புவனேஸ்குமாருக்கு காயம் ஏற்பட்டதால் அந்த போட்டியில் பந்து வீசி இரண்டு இலக்குகளையும் வீழ்த்தி அசத்தினார்.

விஜய் சங்கர் வலைப் பயிற்சியில் ஈடுபட்ட போது பும்ரா வீசிய ஜோக்கர் பந்து, அவரின் கால் விரல்களை பலமாக தாக்கியது. இதனால் விஜய் சங்கர் வலியால் துடித்தார். இன்றைய பயிற்சி ஆட்டத்தில் ஈடுபட்டபோதிலும், அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொண்டார். இதனால் தவானையடுத்து விஜய் சங்கரும் வெளியேறும் நிலை ஏற்படுமோ? என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனினும் "விஜய் சங்கருக்கு காயத்தால் வலி இருந்தது உண்மைதான். ஆனால் நேற்று மாலை வலி குறைந்துவிட்டது. அவருடைய காயம் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை'' என்று அணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 645
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.06.20
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 61,778,780/-
வெற்றி இலக்கங்கள்
10 20 43 65 B
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1579
சீட்டிழுப்பு திகதி 20.05.2019
வெற்றி இலக்கங்கள்
12 18 39 65 N
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட்
ரூ.32,823,480 /=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 24.06.2019 திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 20.06.2019
வெற்றி வாரம் 2543
வர்ணம் கபிலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
04 34 49 55
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,570,880 /=
21.06.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.